ISSN 2279-3607

# கூர்மை

பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை

பொருளியல் துறை,
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

**Advisor**

Dr.S. Jeyarajah
Head, Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editor**

Ms. G. Kajenthini
Lecturer (Probationary),
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editorial Team**

Mr. A. Soundaralingam
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Dr. T. Bhavan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. S. Maheswaranathan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr. K. Pushpakaran
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. J. Suresh,
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

***Coormai***

***Issue: 01***

***2019***

***Publisher***

***Department of Economics,
Faculty of Commerce and
Management,
Eastern University,
Sri Lanka***

***T. No: 065 2240735***

***E-mail:editorcoormai@gmail.com***



**Team of Reviewers**

| | |
|---|---|
| Dr.S. Jeyarajah | Economics |
| Mr. A. Soundaralingam | Economics |
| Dr. T. Bhavan | Economics |
| Mrs. S. Maheswaranathan | Economics |
| Mr. K. Pushpakaran | Economics |
| Mrs. J. Suresh | Economics |
| Prof. V. Kanagasingam | Management |
| Dr. A Andrew | Management |
| Dr. T. Prabaharan | Management |
| Mrs. V. R. Ragel | Management |
| Dr. A. Anton Arulrajah | Management |
| Mrs. F. B. Kennedy | Management |
| Mrs. L. D. Victor | Management |
| Mrs. D. Thavakumar | Management |
| Dr. J. Sutha | Management |
| Mr. R. Uthayakumar | Commerce |
| Mrs. S. Sritharan | Commerce |
| Dr. S. Balendran | Commerce |
| Mr. T. Paranthaman | Commerce |
| Dr. N. Rajeshwaran | Commerce |

## வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் முன்மாதிரி அங்கமாகத் திகழும் பல்கலைக்கழகங்கள் வெறுமனே கற்றல் நடவடிக்கையுடன் மட்டுமல்லாது தாம் கற்றவற்றையும் கேட்டவற்றையும் உலக சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது.

அந்தவகையில் எமது வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் மட்டுமல்லாது புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தனது அதீத கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 1992 ஆம் ஆண்டிலிருந்து **'கூர்மை'** செய்தியேடானது தனது இருபத்தி ஏழு இதழ்களை கிரமமாக வெளியிட்டுள்ளது. இதன் ஒரு பரிணாமமாக கூர்மை இதழானர் சமானர்களின் மதிப்புரையுடன் (Peer Review) கூடிய செய்தியேடானது வருடாந்த சஞ்சிகையாக தான் வளர்ந்து வரும் பாதையில் நிலைத்து நிற்கும் போக்கை எட்டியுள்ளது.

இச் சஞ்சிகையானது பொருளியல் துறைசார் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப்பரீட்சையினை எதிர் கொள்வோருக்குத் தேவையான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைப் பொருளியல் அறிவினை வழங்குவதில் தன்னார்வத்துடன் பங்களிப்புச் செய்துவருகின்றது. அந்தவகையில் சமூதாய நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்குப் பங்களிப்புச் செய்துவரும் எமது விரிவுரையாளர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பீடாதிபதி
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது நீண்டகாலமாக கூர்மை எனும் பொருளியல் செய்தி ஏட்டினை வெளியிட்டு வருவது யாவரும் அறிந்ததே. பொருளியல் பாடத்தினை பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களும், பொருளியல் பாடத்தினை விசேட கற்கை நெறியாக பயிலும் மாணவர்களும் மற்றும் பொருளியலில் ஆர்வமுடையோரும் அவ் வெளியீட்டின் மூலம் நிறைந்த பயனைப் பெற்றுள்ளனர். பொருளியல் துறையின் சமூகம்சார் செயற்பாடுகளின் ஓர் சிறிய முயற்சியாக கூர்மை வெளியிடப்பட்டு வருகின்றது. ஆரம்ப இதழ்கள் கையெழுத்து மற்றும் தட்டெழுத்து மூலமாக வெளியிடப்பட்ட இச் செய்தியேடு இவ்வருடம் தொடக்கம் ஒரு பொருளியல் ஆண்டுச் சஞ்சிகையாக வெளியிடப்படுவதை இட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பொருளியல் சஞ்சிகையானது பொருளியல், முகாமைத்துவம், வணிகம் மற்றும் பொதுவிடயங்கள் தொடர்பான உள்ளடக்கங்களை தாங்கி வெளிவரவுள்ளது. காலத் தேவைக்குகந்த பொருளியல் கட்டுரைகளையும் பொருளியல்சார் அம்சங்களையும் பொருளியல் வல்லுனர்களிடமிருந்து பெற்று இச்சஞ்சிகை வெளிக் கொணரும் பொருளாதார விடயங்களை அறிந்து கொள்வதில் பலரும் ஆர்வமாகவுள்ளனர். பொருளியல் கோட்பாட்டு அம்சங்கள் மாணவர்களுக்கு அவசியமாகிலும் நடைமுறைப் பொருளாதார கருத்துக்களையும் விடயங்களையும் தெரியப்படுத்துவதும் நன்றாகும். எனவே, இச்சஞ்சிகை பலருக்கும் பயனளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

வெளியீடுகளுக்கான நிதித்தடைகளை கருத்திற் கொண்டு இச்சஞ்சிகை நிகழ்நிலை வெளியீடாக வெளியிடப்படுகின்றது. இதன் முழுமையான பிரசவிப்புக்கு கைகொடுத்த அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். குறிப்பாக இச்சஞ்சிகையின் ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள். இதன் தொடர்ச்சிக்கு உங்கள் கருத்துக்களையும், வகிபங்கினையும் தொடந்து வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கலாநிதி ச. ஜெயராஜா
தலைவர், பொருளியல் துறை
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**கூர்மையின் வாசகர்களே..**

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கற்கையை நோக்காகக் கொண்டு, கட்டுரைகள், எண்ணக்கரு விளக்கங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளிட்ட பல விடயங்களை தாங்கிய கூர்மை (செய்தி ஏடு) ஆக வெளிவந்து, இருபத்து ஏழு சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளதில் எமது பொருளியல் திணைக்களம் சார்பாக மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாண்டு கூர்மை திறனாய்வுடன் கூடிய வருடாந்த சஞ்சிகையாக பொருளியல், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக துறைசார் சிறப்புக் கட்டுரைகளைத் உள்ளடக்கி வெளிவருகின்றது. மேலும் எண்ணக்கரு விளக்கம், புள்ளிவிபர இணைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொருளியல்சார் அம்சங்களையும் சேகரித்து நிகழ்நிலை வெளியீடாக இச்சஞ்சிகை வெளிருகின்றது. கூர்மை இத்துறைசார் மாணவர்களுக்கு மாத்திரமின்றி ஆசிரியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இதுவரைகாலமும் கூர்மை செய்தி ஏடு இருபத்து ஏழு இதழ்களை கடந்து கிரமமாக வெளிவருவதற்கு பங்களித்த அனைத்து நபர்களுக்கும், வாசகர்களாகிய உங்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது ஆண்டு சஞ்சிகையாக வெளிவருவதற்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து தங்கள் ஆதரவினை வேண்டிநிற்பதுடன், இச்சஞ்சிகை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

க.கஜேந்தினி
ஆசிரியர்,
கூர்மை

## உள்ளே …

**குறை விருத்தி நாடுகளில் பெண்களும் வறுமையும்**
*ஆ.சௌந்தரலிங்கம்*

**இலங்கை – சீன வர்த்தகம்**
*கலாநிதி எஸ். ஜெயராஜா*

**சுற்றுலாத்துறையில் பயண முகவர்களின் பங்கு**
*கணேசமூர்த்தி கஜேந்தினி*

**பணவீக்கம்: ஓர் அறிமுகம்**
*கணேசன் சுகன்யா*

**நிறைபோட்டி மற்றும் தனியுரிமைச் சந்தைகளின் அறிமுகம்**
வடிவேல் சிந்துஜா

**இலங்கையில் பணவீக்கமும் அதனுடைய தற்காலப் போக்கும்**
ச.சியாளினி & *கலாநிதி த. பவன்*

**வணிகத்தின் தற்காலப் போக்கு**
ப. டிலோஜன்

**இணைப்புக்கள்**

**இணைப்பு 01** — **பொருளியலாளர் ஆடம் ஸ்மித்**

**இணைப்பு 02** — **எண்ணக்கரு விளக்கம்**

**இணைப்பு 03** — **புள்ளிவிபர இணைப்புக்கள்**

# குறை விருத்தி நாடுகளில் பெண்களும் வறுமையும்

*ஆ.சௌந்தரலிங்கம்*[1]

## அறிமுகம்

ஒரு நபருக்குக் கிடைக்கின்ற வளங்கள் அவரது குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதியதாக இல்லாதபோது அது வறுமை எனப்படும் (JR Foundation 2014). மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய எவற்றைப் பயன்படுத்துகிறார்களோ அவை வளங்கள் எனப்படும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வரைவிலக்கணப்படி வறுமை என்பது மனிதனது தெரிவுகள், சந்தர்ப்பங்கள் என்பன மறுக்கப்படுதல், மனித கௌரவம் (dignity) மதிக்கப்படாத நிலை என்பவற்றைக் குறிக்கும். சமூகத்தில் தாக்கமுள்ள வகையில் பங்கு பெறுவதற்கான அடிப்படை இயலளவு இல்லாத நிலையும் வறுமை எனப்படும். போதியளவு உணவு, உடை, கல்வி வசதி, மருத்துவ வசதி என்பன கிடைக்கப்பெறாமை, உணவு பயிரிடுவதற்குப் போதிய நிலம் இல்லாமை, வேலை இல்லாமை, கடன் பெற வழியில்லாமை என்பவையெல்லாம் வறுமையைக் குறித்து நிற்கிறது. மேலும், வாழ்வதற்கான போதிய பாதுகாப்பு, போதிய அதிகாரம் என்பன இல்லாமை, தனிநபர், குடும்பம், சமூகம் என்பவற்றிலிருந்து விலகி நிற்கின்ற ஒரு நிலையும் வறுமை எனப்படும். வன்செயல்களால் இலகுவில் பாதிக்கப்படும் தன்மை, இலகுவில் அழியக்கூடிய சுற்றுச்சூழலில் வாழும் நிலமை, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளின் கிடைப்பனவு என்பன இல்லாத நிலைமையும் வறுமை எனப்படும் (United Nations, 1998). இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் வறுமை என்பதனை பின்வருமாறு வரையறுக்கிறது. மக்கள் தமது நுகர்வு மட்டம் அல்லது வருமான மட்டம், வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சில உரிமைகளை

---

[1] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

அனுபவித்தல் என்பவற்றில் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படும் ஒருநிலை வறுமை எனப்படும் (Dept. of Census and Statistics Sri Lanka). வறுமை என்பது மனித வாழ்வின் ஒரு அம்சத்தை மட்டும் பிரதிபலிக்கும் விடயம் அல்ல. மாறாக பல்வேறு அம்சங்களின் தொகுப்பாக அது அமைகிறது. நிதிச்சொத்துக்களின் பற்றாக்குறை, ஏனைய சொத்துக்களைப் பெற வழி இல்லாமை, வாழும் சமுகத்தில் உரிமை மறுக்கப்படுதல் என்பன அவ்வம்சங்களில் சிலவாகும் (Sara Hendricks, 2019).

**வறுமையை அளவிடுதல்**

தமது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான வளங்களைப் பெற்றிராத மக்களின் தொகையை அளவிட்டு ஒரு நாட்டின் முழுவறுமையை (Absolute Poverty) அடையாளம் காண்கிறோம். வறியவர்கள் எவ்வாறு இனம் காணப்படுகிறார்கள்? ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச மெய்வருமான மட்டத்திற்குக் கீழாக வருமானத்தைப் பெற்று வாழ்பவர்களே வறியவர்கள் ஆவர். இந்த குறைந்தபட்ச மெய்வருமான அளவு சர்வதேச வறுமைக்கோடு என அழைக்கப்படுகிறது. வறுமைக்கோடு எவ்வாறு வறுமையை அளவிடுகிறது? நாளொன்றுக்கு 1.25 அல்லது 2 அமெரிக்க டொலர்கள் (PPP Dollars) இந்த குறைந்தபட்ச வறுமைக்கோட்டு வருமானமாக தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த வருமான எல்லைக்குக் குறைவாகப் பெறுவோர் வறியவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இவர்களின் எண்ணிக்கையானது ஒரு நாட்டின் மொத்த சனத்தொகையில் எத்தனை சதவீதமாகக் காணப்படுகிறது என்பது கணக்கிடப்பட்டு தலைக்கணிப்புச்சுட்டி (Head Count Index) கணிப்பிடப்படுகிறது. இச்சுட்டி நாட்டின் முழுவறுமை நிலையைக் காட்டி நிற்கிறது. இச்சுட்டியில் குறைபாடுகள் உள்ளதென்று கூறி அதனை நிவர்த்திப்பதற்கு மொத்த வறுமை இடைவெளி என்ற கணிப்பு முறை பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டது. வருமானத்தை அடிப்படையாக வைத்து வறுமையைத் திட்டவட்டமாக அளவிடமுடியாது, வறுமை தொடர்பான கணிப்பீட்டில் வருமானம் என்பதற்கு மேலதிகமாக வேறு பல அம்சங்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 1997ல் மானிட வறுமைச்சுட்டி (HPI) என்ற கணிப்பீடு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்திட்டத்தினால் உருவாக்கப்பட்டது. இதனிலும் மேம்பட்ட பல்பரிமாண வறுமைச்சுட்டி (MPI) என்ற வறுமைக் கணிப்பீட்டு முறையொன்று 2010ல் உருவாக்கப்பட்டது.

**வறுமைக் குழுக்கள்**

குறைவிருத்தி நாடுகளின் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் அந்தந்த நாட்டு அரசாங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன. இவை வறுமைக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிந்து செயற்றிறன் வாய்ந்த கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வடிவமைக்கின்றன. ஆனால் இவற்றை வடிவமைப்பதற்கு முன்னர் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களை தனித்தனிக்குழுக்களாகப் பிரித்து நோக்கி அவற்றுக்கென இருக்கின்ற தனித்துவமான சமூக, பொருளாதார இயல்புகள் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் (World Bank, 2000/2001). ஏனெனில் வறுமையால் வாடும் ஒவ்வொரு குழுவும் தனக்கெனப் பிரத்தியேகமான சில பிரச்சனைகளைக் கொண்டுள்ளது. வறுமையை ஒழிப்பதற்கெனத் தயாரிக்கப்படும் பொதுவான கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் வறுமைப் பிரச்சனையைத் தீர்ப்பதில் எதிர்பார்க்கும் வெற்றியைத் தருவதில்லை. எனவே வறிய மக்களைத் தனித்தனிக் குழுக்களாகப் பிரித்து அக்குழுக்கள் எதிர் நோக்கும் தனித்துவமான பிரச்சனைகளுக்கேற்ற வகையில் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துவதே வெற்றியைத்தரும். அந்த நோக்கில்தான் வறியவர்களைப் பல்வேறு குழுக்களாக வகைப்படுத்துகிறார்கள். சொந்த நிலம் இல்லாத காரணத்தினால் நிரந்தரமான வருமானம் இன்றி வறுமையில் வாடும் கிராமத்தவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு நிரந்தர வருமான வாய்ப்புக்கள் அற்ற நிலையில் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள், குறிப்பிட்ட பிரதேசத்தில் நிலவுடமை, சொத்துடமை என்பன அற்ற நிலையில் அன்றாடம் கூலித்தொழில் செய்து குறைந்த வருமானம் பெற்று வறுமையில் வாடும் சிறுபான்மை இனக்குழுக்கள், குறிப்பிட்ட பிரதேசத்தில் ஆதிக்குடிகளாக இருந்து பல்வேறு காரணங்களினால் நிலம், சொத்துக்கள் போன்றவற்றை இழந்து அதன் காரணமாக

வறுமையில் வாடும் சில குழுக்கள் என்று பல்வேறு வறுமைக்குழுக்கள் வறுமை பற்றிய ஆய்வாளர்களினால் இனங்காணப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் வறுமைக்குழுக்களில் ஒன்றாக இனங்காணப்பட்டிருக்கும் வறிய பெண்களின் பிரச்சினைகள் பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது. வறுமைக் கணிப்பீட்டில் பால் சார்ந்த அணுகுமுறையானது ஏன் அவசியம்?, பெண் வறுமையின் சிறப்பியல்புகள் எவை? பெண்களின் வறுமையொழிப்புக்கான ஆலோசனைகள் எவை? என்பனவும் இங்கு ஆராயப்படுகின்றன.

**வறுமைக் கணிப்பீட்டில் பால் சார்ந்த அணுகுமுறை ஏன் அவசியம்?**

வறுமையும் பெண்களின் வாழ்வுப் பிரச்சனையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும். ஆயினும் நாட்டின் வறுமையைச் சுட்டிக்காட்டும் புள்ளிவிபரங்கள் பெண்களை மையப்படுத்திப் பெரும்பாலும் தயாரிக்கப் படுவதில்லை. அதேபோன்று வறுமையைக் குறைக்கும் மூலோபாயங்களைத் தெரிவு செய்யும்போது பெண்களின் வறுமையைப் போக்கவென தனித்துவமான கொள்கைத்தெரிவுகள் இடம்பெறுவதில்லை அல்லது குறைவாகவே காணப்படுகின்றன. வறுமையைக் குறைக்கும் செயற்றிட்டங்களில் பெண்களின் வறுமை ஒழிப்புத் தொடர்பான அம்சங்கள் மிகவும் சிறிய அளவிலேயே இடம்பெறுகின்றன. ஆண்களின் வறுமைப் பிரச்சினையை ஆராயும் அதே கண்ணோட்டத்தில் பெண்களின் வறுமைப்பிரச்சனையை ஆராய முடியாது (Naila, 1994).

**அ) பெண்களுக்கு பிரத்தியேகமான கடமைகள், பொறுப்புகள்.**

வறுமை என்பது பொதுவாக ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்று சகல தரப்பினரையும் பாதிக்கின்ற விடயமாக இருந்த போதிலும் சமூகத்தில் பெண்ணாகப் பிறந்தவர்க்கு ஆண்களை விட பிரத்தியேகமான கடமைகள், பொறுப்புகள் என்பன காணப்படுவதனால் வறுமை அவர்களை மிகவும் மோசமாகப் பாதிக்கின்றது. ஒரு சமூகத்தின் கலாசார விழுமியங்களைப் பேணுவதிலும், அதனை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதிலும் பெண்களின் வகிபங்கு இன்றியமையாதது.

இப்பணியை செவ்வனே செய்வதற்கு வறுமையானது பெரும் தடைக்கல்லாக அமைவதால் அதனை எதிர்த்து தமது கடமைகளை மேற்கொள்வதில் பெண்கள் பெரும் சவால்களை எதிர் நோக்குகிறார்கள். சர்வதேச மட்டத்தில் ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்கள் 63% குறைவாக சம்பாதிக்கிறார்கள். இத்தனைக்கும் பெண்கள் ஆண்களை விட மூன்று மடங்கு அதிகமாக வீட்டு வேலை போன்ற வருமானம் பெறாத பணிகளில் தமது நேரத்தைச் செலவிடுகிறார்கள் (Hendriks, 2019). இது பெண்களின் மிக மோசமான வறுமையை எடுத்துக் காட்டுகிறது.

### ஆ) வறுமையின் பல்பரிமாணத் தன்மை

வறுமை பற்றிய குறிகாட்டிகள் பொதுவாக குடும்பம் சார்ந்த தகவல்களை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படுகின்றன. குடும்ப வருமானத்தின் அடிப்படையிலேயே வறுமை இன்று பரவலாக எல்லா நாடுகளிலும் அளவிடப்படுகிறது. குடும்பத்தில் அங்கம் பெறுகின்ற ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் இடையே அக்குடும்ப வருமானம் எவ்வாறு பகிரப்படுகிறது போன்ற தகவல்களை இக்குறிகாட்டிகள் வெளிக்காட்டுவதில்லை. அதாவது வறுமையின் பல்பரிமாணத்தன்மையை இந்த வருமானம் சார் அளவீடு பிரதிபலிப்பதில்லை. குறிப்பாக வறிய குடும்பங்களில் கிடைக்கும் வருமானத்தை பகிர்ந்து கொள்வதில் ஆண், பெண் பாலாரிடையே ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. பெண்களுக்கான வருமான ஒதுக்கீடு ஆண்களை விடக் குறைவாகவே அமைந்து அவர்களை வறியவர்களாக மாற்றி விடுகிறது.

### இ) இறுக்கமான தொழிற்பிரிப்பு நிலைமை

மாறிவரும் உலக சூழலுக்கேற்ப குடும்பத்தில் பெண்களின் நடிபங்கானது மாறிவருகிறது. குடும்பத்தலைவியாக பெண்ணின் பொறுப்புக்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. குடும்பத்தில் சில கடமைகளை பெண்கள்தான் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு தொழிற்பிரிப்பு நிலைமை குடும்பங்களில் வளர்ச்சி பெற்று வந்து விட்டது. இவ்வாறு பெண்ணுக்கென்று வீட்டு வேலைகளையும் பொறுப்புக்களையும் மிகவும் இறுக்கமான முறையில் சமூகம் ஒப்படைத்திருப்பதனால் அவர்கள் பெற்று அனுபவிக்கக்கூடிய பல விடயங்களை இழந்து விடுகிறார்கள்.

கல்வி, சுகாதாரம் போன்ற சமூகம்சார் வளங்களைப் பெற முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். வருமானம் கருதிச் செய்யக்கூடிய வேலைவாய்ப்புக்களை இழந்துவிடுகிறார்கள். அரசியலில் பங்கு பெறும் சந்தர்ப்பம், சமூக பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் என்பவற்றிலிருந்தும் பெண்களை அந்த இறுக்கமான தொழிற்பிரிப்பு தடுத்து விடுகிறது. மேலும் பெண்கள் சமூகத்தொடர்புகளினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய பொருட்கள், சேவைகள், வருமானம் என்பவற்றையும் கல்வி மற்றும் கலாச்சார அறிவுகளையும் பெறமுடியாதவர்களாக ஆக்கப்படுகிறார்கள். இந்த ஏற்றத்தாழ்வு நிலை பெண்களின் வாழ்நாள் முழுவதும் நீடித்து அவர்களை வறுமைக்குள் மூழ்கடித்து விடுகிறது.

### ஈ) பால் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள்

பல குறைவிருத்தி நாடுகளில் சமூக வரிசைப் படிமுறைகளில் பெண்கள் மிகவும் கீழ்நிலையில் வைத்து நோக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சமூகரீதியாக பால்சார்ந்த சமத்துவமற்ற சூழ்நிலையினை ஏற்படுத்தி விடுகின்றன. வறுமையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள், அதனை ஒழிப்பதற்குத் தேவையான கொள்கைத் தெரிவுகள் என்பன வறுமையை நாம் அளவீடு செய்யும் முறை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. குடும்பங்.களின் சமூக பொருளாதார இயல்புகளினை மட்டுமே வைத்து வறுமையானது அளவீடு செய்யப்படுவதனால் குடும்பத்தினுள்ளே அடிப்படைத்தேவைகளைப் பெற்றுக்கொள்வதுதொடர்பாக நிலவும் பால் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளை அடையாளம் காண்பதென்பது சாத்தியமற்ற விடயமாகவே காணப்படுகிறது.

### உ) குடும்பம் சார்ந்த அளவீடுகளின் குறைபாடுகள்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வறுமையை அளவிட குடும்பம் சார்ந்த அளவீடுகளே பயன்படுத்தப்படுகின்றன. குடும்பம் சார்ந்த அளவீடுகளில் வருமானம் என்ற ஒரு விடயம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகிறது. பெண்கள் குடும்ப அங்கத்தவரின் தேவைக்காக வருமானம் பெறாமல் வழங்கும் பணிகளுக்காக

செலவிடும் நேரம், குடும்ப அங்கத்தவரிடையே வளப்பகிர்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், அத்தகைய ஏற்றத்தாழ்வான நிலைகளில் காலப்போக்கில் ஏற்பட்டுச்செல்கின்ற முன்னேற்றமான மாற்றங்கள் என்பவற்றை இக்குடும்பம் சார்ந்த அளவீடுகள் வெளிப்படுத்துவதில்லை. பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் காணப்படுகிறதா?, பால் சார்ந்த வன்முறைகளுக்கு அவர்கள் உள்ளாக்கப்படுகிறார்களா? என்பன போன்ற பிரச்சனைகள் வறுமை பற்றிய ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

பெண்களின் வறுமை தொடர்பாக இவ்வாறான பிரச்சனைகள் காணப்படுவதனாலேயே பால் சார்ந்த அணுகுமுறையைக் கொண்டதாக வறுமை தொடர்பான அளவீடுகள் காணப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. அவ்வாறான பால் சார்ந்த அணுகுமுறை பின்பற்றப்படுவது வறுமை என்ற எண்ணக்கரு மேலும் விரிவாக்கம் பெறுவதற்கு உதவுவதாக அமையும். இவ்வாறான அணுகுமுறையில் வறுமையின் பல்பரிமாணத்தன்மை கருத்தில் எடுக்கப்படுகிறது. குறிப்பாக பெண்களின் வறுமை நிலையை சிறப்பாகவும் விரிவாகவும் ஆராய்வதற்கு இப் பால்சார்ந்த அணுகுமுறை உதவும்.

### பெண் வறுமைக்கான அடிப்படைக் காரணங்கள்

இன்று உலகில் வாழும் மொத்த வறியவர்களில் பெண்களின் பங்குதான் அதிகம். குறைவிருத்தி நாடுகளில் வறுமை காரணமாக அவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகிறார்கள். நல்ல வைத்தியவசதிகள், சுத்தமான குடிநீர், சுத்தமான சுற்றுச்சூழல் என்பன அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இவ்வாறு அவர்கள் வறுமையில் வாடுவதற்கான காரணங்களை நோக்கலாம்.

### அ) குடும்பத்திற்குத் தலைமை தாங்குதல்

குறை விருத்தி நாடுகளில் தமது குடும்பத்தைத் தாமே தலைமை தாங்கி நடாத்தும் பெண்களே மிகவும் தீவிரமான வறுமையினை அனுபவிக்கும் பெண்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். குடும்ப வருமானத்திற்கு ஆதாரமாக பெண்களின் வருமானம் மட்டுமே அமையும்போது அது பெண் தலைமை தாங்கும் குடும்பமாகிறது. இக்குடும்பம் தமது வருமானத்தில் 80% தை உணவுக்காக செலவழிக்கிறது. அவ்வாறு செலவழித்து

தமக்குத்தேவையான உணவில் 80% திற்குக் குறைவாகவே பெற்றுக் கொள்கிறது. பொதுவாக ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்களின் உழைக்கும் ஆற்றல் கணிசமான அளவுக்கு குறைவானதாகக் காணப்படுகிறது. பொதுவாக குறைவிருத்தி நாடுகளில் குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்களின் கல்வியறிவு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. குறைந்த வருமான ஈட்டத்திற்கு இதுவும் ஒரு காரணியாக அமைந்துவிடுகிறது.

### ஆ) ஆண்-பெண் கொடுப்பனவு ஏற்றத்தாழ்வு

குறிப்பிட்ட ஒரே வேலையைச் செய்வதற்கு பல குறைவிருத்தி நாடுகளில் பெண்களுக்கு குறைவாகவே கூலி வழங்கப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் உயர் வருமானம் தரும் தொழில்கள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. நகரப்புறங்களில் பெண்கள் முறைசார்ந்த தொழில்களை விட(Formal) முறைசாராத (Non formal) தொழில்களிலேயே அதிகம் ஈடுபடுகிறார்கள். பல குறை விருத்தி நாடுகளில் பெண்கள் மது வியாபாரம், பாலியல் தொழில் போன்ற நிரந்தர வருமானம் தராத சட்ட விரோத தொழில்களில் ஈடுபடுகிறார்கள். சிறு வியாபார முயற்சிகளில் அதிக நேரம் செலவழித்து குறைந்த வருமானம் பெறுகிறார்கள். ஆடைத் தொழிற்சாலைகளில் துண்டு வேலை (Piece Work) செய்யும் பெண்கள் குறைந்தபட்ச கூலிச்சட்டம் (Law of Minimum Wage) சமூகப்பாதுகாப்பு வசதிகள் (Social Security) போன்றவற்றின் நன்மைகளைப் பெறத் தவறி விடுகின்றனர். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களுக்குக் குறைந்த பட்ச கூலி, தொழில் பாதுகாப்பு சட்டங்கள் என்பன மறுக்கப்படுகின்றன. நிரந்தர வருமானம் பெறுமளவிற்கு கிராமத்துப் பெண்களிடம் போதுமான வளங்கள் இருப்பதில்லை. சில நாடுகளில் சட்டங்களும், சமூக வழமைகளும் பெண்களின் சொத்துரிமையை மறுக்கின்றன. கணவனின் சம்மதமின்றி நிதி சார்ந்த ஒப்பந்தங்கள் செய்வதை அவை தடுக்கின்றன. சில குறைவிருத்தி நாடுகளில் அரச வேலை வாய்ப்புக்கள் வருமானத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன பெருமளவுக்கு ஆண்களுக்கே வழங்கப்படுகின்றன. ஆண்-பெண் வருமான ஏற்றத்தாழ்வுக்கு இவை வித்திடுகின்றன.

## இ) குடும்பத்தினுள் பால் ரீதியான பாரபட்சம்

குறைவிருத்தி நாடுகளில் குடும்பமொன்றுக்கு கிடைக்கும் வருமானம் அதன் அங்கத்தவர்க்கிடையே பாரபட்சமான முறையில் பகிரப்படுகிறது. இவ்விடயங்களில் பெண்களை விட ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. உணவு மற்றும் மருத்துவ வசதிகளின் பகிர்வின்போது பெண்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இப் பாரபட்ச நிலை காரணமாக பெண் குழந்தைகளின் இறப்பு வீதம் ஆசியாவில் அதிகமாக உள்ளதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் ஆண்பிள்ளைகளே கடினமாக உழைப்பவர்கள், குடும்ப வருமானத்திற்கு இறுதி வரை பங்களிப்பு செய்பவர்கள், இறுதிக்காலம் வரை பெற்றோரை வைத்துப்பராமரிப்பவர்கள் போன்ற எதிர்பார்ப்புகளினால் ஆண் பிள்ளைகளே நல்ல கவனிப்பு பெற்று வலுப்படுத்தப்படுகிறார்கள். பெண் பிள்ளைகள் ஒதுக்கப்படுகிறார்கள். இது பெண் வறுமை தொடர்ந்து நீடிக்கக் காரணமாக அமைகிறது. இப்பாரபட்சமானது பெண்கள் தமது பொருளாதார அந்தத்தை உயர்த்திக்கொள்ளும் நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திவிடுகிறது. ஒரு குடும்பத்தின் மொத்த வருமானத்தில் அக்குடும்பத்தில் அங்கம் பெறும் பெண்களின் பங்களிப்பு சார்பளவில் உயர்வாக இருக்கும் நிலையில் அக்குடும்பத்தில் பெண்கள் மீதான பாகுபாடு குறைவாக அமைந்திருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. எனவேதான் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் போசாக்கு மற்றும் குடும்ப சுகாதாரம் சார்பான நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுவாக குடும்ப அலகுகளை இலக்காகக் கொண்டு அமையாமல் பெண்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. பொதுவாக பெண்களின் பொருளாதார அந்தஸ்து குறைவாக இருக்கும் குடும்பங்களில் அவர்களின் வாழ்க்கை மட்டமானது கீழ்நிலையிலேயே காணப்படுகிறது.

## ஈ) குடும்ப வருமானத்திலும் வளத்திலும் வரையறுக்கப்பட்ட பெண்களின் ஆதிக்கம்

பெண்கள் தமது குடும்பத்திற்கென ஆற்றுகின்ற சேவைகளுக்கு கொடுப்பனவுகளைப் பெறுவதில்லை. அதேவேளை குடும்பத்திற்குச் சொந்தமான பண்ணை மற்றும் சிறுவியாபார முயற்சிகளிலும் கணிசமான அளவில் தமது உழைப்பை

வழங்குகிறார்கள். ஆயினும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தமக்கு விருப்பமான விடயங்களில் செலவிட அவர்களுக்குப் போதிய சுதந்திரம் கிடைப்பதில்லை. பங்களாதேசில் ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அநேக பெண்கள் உள்ளூர் வழமைப்படி தமது சம்பளப்பணத்தை தம் கணவரிடம் அல்லது பெற்றோரிடம் கையளித்து விடுகின்றனர். தாம் உழைத்த பணம் எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. குடும்பத்திற்குத் தலைமை தாங்கும் கணவனோ அல்லது பெற்றோரோ செலவுத் தீர்மானங்களை எடுக்கிறார்கள். அத்துடன் அநேகமான குறைவிருத்தி நாடுகளில் பெண்கள் வேலை செய்வது சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான எல்லாக்காரணிகளும் சேர்ந்து பெண்களின் பொருளாதார அந்தஸ்தை தொடர்ச்சியாகப் பாதித்து வருவதனால் அவர்களுக்கு குடும்ப வருமானத்தில் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போகின்றது. இந்நாடுகளில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் அபிவிருத்திக் கொள்கைகள், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றில் பெரும்பாலானவை ஆண்களின் வருமான அதிகரிப்பு சார்ந்ததாகவே அமைந்து காணப்படுகின்றன. இது குடும்ப வருமானத்தில் பெண்களின் ஆதிக்கத்தை மேலும் கட்டுப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது.

## பெண் வறுமையின் பொருளாதாரப் பாதிப்புக்கள்

ஒரு நாட்டில் பெண்களைத் தொடர்ந்தும் வறுமையில் வைத்திருப்பது நீண்டகால அடிப்படையில் பொருளாதாரரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதேவேளை ஒழுக்க நெறிமுறை சார்ந்த பிரச்சனைகளையும் ஏற்படுத்தும். பெண் வறுமையைப் போக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து அந்நாட்டின் அபிவிருத்தி இலக்குகள் பாதிக்கப்படும். பெண்களின் பொருளாதார அந்தஸ்து குறைந்த மட்டத்தில் இருப்பதானது நீண்டகாலத்தில் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை குறைந்த மட்டத்திற்குக் கொண்டு சென்றுவிடும். ஏனெனில் இன்றைய சிறுவர்களின் கல்வி வளர்ச்சி எவ்வாறு அமையப்போகிறது, எதிர்காலத்தில் அவர்களது நிதி நிலைமை எப்படி இருக்கப்போகிறது என்பவற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக அன்னையரின் பொருளாதார அந்தஸ்தே விளங்குகிறது.

பெண்களை ஒதுக்கிவிடாது அவர்களை வளப்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிச் செய்முறையில் அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் மனித மூலதனத்தில் மேற்கொள்ளப்படும் நிகழ்கால முதலீடுகளின் நன்மைகளை எதிர்கால தலைமுறையினருக்கு கொண்டு செல்லமுடியாமல் போய்விடும். எனவே பெண்களின் வறுமையை நீக்கி அவர்களை வளப்படுத்தாவிட்டால் எதிர்கால சந்ததி பாதிக்கப்படும்.

## குறை விருத்தி நாடுகளில் பெண் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள்

### அ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

பெண்களை அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் இணைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான அபிவிருத்திக் கொள்கையானது பெண்களின் நலன்களில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைய வேண்டும். நாட்டில் வறியவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமானால் முதலில் பெண்களை இயல்பான ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அவ்வாறு கொண்டுவரும்போதுதான் கல்வியிலும், பயிற்சி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களிலும், முறை சார்ந்த வேலைவாய்ப்புக்களிலும், விவசாயம் தொடர்பான விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெண்களின் பங்குபற்றல் வீதத்தை அதிகரிக்க முடியும். அவர்களின் வறுமையை ஒழிக்கமுடியும்.

### ஆ) சமமான வளப்பகிர்வு

கல்வி மற்றும் ஏனைய சேவைகள், வேலை வாய்ப்புக்கள், சமூகப்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றினூடாக குறை விருத்தி நாட்டு அரசாங்கம் வழங்கும் வளங்கள் பெண்களுக்கும் சமமான அளவில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலான பெண்கள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள சில முறைசாராத தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவற்றில் பலவற்றுக்கு அரச அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதில்லை. அதனால் அத்தொழில் நடவடிக்கைகள் பல்வேறு காரணங்களினால் பாதிப்புக்குள்ளாகும்போது அவற்றுக்கான

நிவாரணங்கள், அரச உதவிகள் என்பன பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் கிடைக்காமல் போகிறது. எனவே தகுதியான அத்தகைய தொழில்களுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை அரசு வழங்க வேண்டும். அதன் மூலம் பெண்களின் வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும். வருமானம் பெருகும். அவர்களின் பொருளாதார அந்தஸ்து உயரும்.

### இ) பெண்கல்வி, தொழிற்திறன் விருத்தி

பெண்களைக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும்போது நாட்டில் மனித மூலதனம் உருவாக்கப்படுகிறது. மனித மூலதன உருவாக்கமானது நீண்ட காலத்தில் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள உதவும். பெண்களுக்கு கட்டாயக்கல்வி வழங்கப்பட வேண்டும். தொழிற்திறனானது அவர்களிடம் வளர்க்கப்பட வேண்டும். பெண் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துக் கற்பிக்கும் குடுத்பத்திற்கு பண உதவிகளை வழங்கும் செயற்றிட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தலாம். பெண் பிள்ளைகளுக்கென சிறப்பான புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தலாம்.

### ஈ) பெண் ஊழியச்செறிவு அதிகரிப்பு

குறைவிருத்தி நாடுகளில் இடம்பெறும் உற்பத்தி முயற்சிகள் கூடியளவுக்கு ஊழியச்செறிவு உடையனவாக இருப்பது நாட்டில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும். அதேவேளை அவை பெண் ஊழியச்செறிவு உடையனவாக இருந்தால் பெண் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். அரசாங்கம் இதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். அது பெண் வறுமையைக் குறைக்க உதவும்.

### உ) பெண்களுக்கு நிலப்பங்கீடு

அரச நிலங்கள் பொதுமக்களிடையே பங்கீடு செய்யப்படும்போது பெண்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்கலாம். பெண் தலைமை வகிக்கும் குடும்பத்திற்கு இவ்விடயத்தில் முன்னுரிமை வழங்கலாம். அது குடும்ப வருமானத்தை உயர்த்தி பெண் வறுமையைக் குறைக்கும்.

**ஊ) குறைந்த வட்டி, மலிவான உள்ளீடு, வரிச்சலுகை**

சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களுக்கு விசேடமாக குறைந்த வட்டியில் கடன்களை வழங்கலாம். மானிய விலையில் உள்ளீடுகளை வழங்கலாம். பெண்கள் நடாத்துகின்ற தொழில் முயற்சிகளுக்கு வரிச்சலுகை வழங்கலாம். இதனால் பெண் தொழில் முயற்சிகள் விருத்தியடைந்து அவர்களின் வருமானம் பெருகி பெண் வறுமை குறையும்.

**எ) பெண் சுகாதாரம், நேரடிப்பணமாற்றல், டிஜிட்டல் வங்கி முறை நிகழ்ச்சித்திட்டங்கள்**

பெண்களின் வாழ்வுக்காலத்தை நீடிக்கும் வகையிலான சுகாதாரம் சார் நிகழ்ச்சித்திட்டங்கள், பெண்களின் போசாக்கு நிலைமையை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் போன்றவற்றில் அரசாங்கம் செலவீடுகளை மேற்கொள்ள வேண்டும். வறுமையில் வாடும் பெண்களுக்கு நேரடிப் பணமாற்றல்களை அரசாங்கம் வழங்கலாம். காசுக்கு வேலை என்ற அடிப்படையில் (Cash-for-Work) பிரதேசத்தின் உட்கட்டுமான அபிவிருத்தி சார்பான குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்களில் பெண்களை ஈடுபடுத்தி ஒரு நிச்சயமான வருமானத்தினை அவர்கள் பெறச்செய்யலாம். விருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண்களால் உழைக்கப்படும் சம்பளப் பணமானது அவர்களின் வங்கிக் கணக்குக்கு நேரடியாக அனுப்பப்பட்டு அதிலிருந்து அவர்களே டிஜிட்டல் வங்கிமுறை மூலமாக பணம் எடுக்கும் வசதிகள் செய்யப்படும்போது அவர்கள் தமது சொந்த தேவைகளை தாம் விரும்பியபடி திருப்தி செய்து கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதாக அண்மைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

## பெண் வறுமை ஒழிப்பு: சில கொள்கை நெறி முறைகள் (General Policy Direction)

பெண் வறுமையை ஒழிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பின்வரும் நான்கு கொள்கை நெறிமுறைகளுக்குள் அடக்கிக் கூறிவிடலாம்.

**அ)** பெண்களின் வருமானம் அதிகரிக்கப்படவேண்டும். அவர்களின சொத்துடமை மேம்படுத்தப்படவேணடும். போதிய பொருளாதார சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேணடும். வளங்களைப் பெறுவதில் உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும்.

**ஆ)** நாடுகள் ஒவ்வொன்றினதும் அரசியல் பொருளாதாரமானது பெண் வறுமையை அகற்றும் வகையில் செயல்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் நிலைத்த தன்மையை பேணும் வகையில் நாட்டின் ஆட்சி முறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும்.

**இ)** குறைவிருத்தி நாட்டுமக்களிடையே காணப்படும் கலாசார நடைமுறைகள் மிகவும் ஆழமாக வேரூன்றிக் காணப்படுகின்றன. பெண் வறுமையை மற்றும் பால் சமத்துவமின்மையை நீக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கும்போது அங்கிருக்கும் மரபார்ந்த சமூகக்கட்டமைப்பில் அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

**ஈ)** ஒரு மரபார்ந்த சமூகமானது ஆண் அதிக்கம் உள்ளதாகக் காணப்படுமானால் அச்சமூகம் சார்ந்த மக்களை முழுமையாகக் கருத்தில் எடுத்து வறுமையை ஒழிப்பதோ அல்லது வருமான ஏற்றத்தாழ்வை இல்லாமல் செய்வதோ பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவாமல் போகலாம். எனவே வெளிப்படையாகப் பெண்களை இலக்காகக் கொண்ட விசேடமான வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளே பெண் வறுமை ஒழிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டும். பொதுவான வறுமைக்குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்ததாக பெண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களும் அமைவது சிறந்த பெறுபேறுகளைத் தரும்.

## உசாத்துணைகள்


Department of Census and Statistics, Sri Lanka, 2017 (www.Statistics.gov.lk/poverty)

Hendriks, S. (2019). Banking on the future of women, Finance and Development March.

JRF Programme paper, JR Foundation. 2014 (www.jrf.org.UK)

Naila, K., (1994). Reversed Realities; Gender Hierarchies in development thought,London, Ed Verso

United Nations, 1998 (www.tolerence.org.tt-poverty-h1 )

World Developing Report , World Bank 2000/2001.

## இலங்கை – சீன வர்த்தகம்

கலாநிதி எஸ். ஜெயராஜா[2]

### அறிமுகம்

இலங்கை சீன அரசியல், பொருளாதார உறவுகள் பல தசாப்தகால வரலாறு கொண்டது. நீண்ட, ஆழ்ந்த பல பரிமானங்களுடனான உறவுடன் இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு பரஸ்பர புரிந்து ணர்வுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார மற்றும் மத கலாசார உறவுகள் தொடர்பான விடயங்கள் பலவும் இன்று ஆய்வாளர்களின் மிகுந்த கவனத்திற்கு உட்பட்டுகின்றன. இலங்கையின் இன்றைய மிகப்பலமான உதவியாளராகவும், உதவி வழங்குநராகவும், மிகப் பெரிய முதலீட்டாளராகவும் சீனா உள்ளது. இந்நிலை 2014ஆம் ஆண்டு இறுதியிலிருந்து இருநாடுகளும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றினை செய்துகொள்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. இக் கட்டுரையானது இலங்கை மற்றும் சீனா ஆகிய இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார, வர்த்தகத் தொடர்புகள் மற்றும் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பற்றிய விடயங்ளை சுருக்கமாக விளக்குகிறது.

### இலங்கை – சீன உறவுகள்

இன்று உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடு என்ற நிலையினை சீனா பெற்றுள்ளது. சர்வதேச ரீதியில் மக்கள் சீனக் குடியரசினை முதன்மைப்படுத்தும் நாடுகளில் இலங்கை முன்னிடத்தில் உள்ளது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார அந்தஸ்தைப் பெற்றுள்ள சீனாவும், குறைந்த நடுத்தர வருமானமும் கொண்ட இலங்கையும் பொருளாதார விடயங்களில் ஒன்றிணைவது ஆய்வுக்குரியதாகும். சீனா தென்னாசிய நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளை பல தசாப்தங்களாகவே பேணி வருகின்றது. எனினும், பொருளாதாரத்

---

[2] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

தொடர்புகள் ஒப்பீட்டளவில் சமீப காலத்திலேயே உயர்வடைந்து வருகின்றது. ஆசிய நாடுகளில் சீனாவின் முதலீடு மிகப் பெரியதாகும். இதில் மிகக்கூடிய பங்கு தென் கிழக்காசிய நாடுகளை மையம் கொண்டதாக விருந்தது. எனினும், 2003 ஆம் ஆண்டிலிருந்து தென் ஆசிய நாடுகளிலும் சீனா கூடுதலான முதலீட்டினை மேற்கொண்டு வருகின்றது. பங்களாதேசம், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் உட்கட்டுமான அபிவிருத்தியில் சீனா மிகுந்த ஆர்வத்தினை செலுத்தி வருகின்றமை கவனிக்கத்தக்கது.

இலங்கைக்கும் சீனாவிற்குமிடையிலான நட்புறவின் வரலாறு பல தசாப்தங்கள் பழமையானதாகும். மதம் மற்றும் கலாசார தொடர்புகள் இந்த நட்புறவிற்கு அடித்தளமாகும். இலங்கையின் புராதன வரலாற்றுக் கால பௌத்தமதம் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதற்காக சீனநாட்டு பௌத்த துறவிகள் இலங்கைக்கு விஜயங்களை மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. பல்வேறு கலாசார அம்சங்களின் அடிப்படையில் இரு நாட்டுக்குமான தொடர்புகள் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளன. எனினும் சீன-இலங்கை உறவுகள் 1950 இன் பின்னர் வலுப்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். 1952 பெப்ரவரி மாதம் இலங்கைக்கும், சீனாவிற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட "சீன இலங்கை இறப்பர் அரிசி ஒப்பந்தம்" மூலமாக இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதாரத் தொடர்புகளும் வலுப்பெறத் தொடங்கின. கமினுசக் கொள்கையினைப் பின்பற்றாத நாடொன்றுடன் சீனா செய்து கொண்ட முதலாவது ஒப்பந்தமும் இதுவேயாகும். இலங்கைக்கும், சீனாவிற்குமான பொருளாதார நட்புறவினை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு இவ்வொப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் குறுங்கால அடிப்படையில் செய்யப்பட்ட இவ்வொப்பந்தமானது பின்னர் 1982 வரை புதுப்பிக்கப்பட்டு நீண்டகாலத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஒவ்வொரு வருடமும் கைச்சாத்தடப்பட்டது. 1977-1982 வரையான காலப்பகுதியில் இவ் ஒப்பந்தம் தொடர்பான பல மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. இலங்கைக்கு மிகச் சாதகமாகக் காணப்பட்ட இவ்வொப்பந்தம் மூலம் சர்வதேச விலையினை விட குறைவான விலையில் அரிசியினை இலங்கை இறக்குமதி செய்து கூடிய

விலைக்கு இயற்கை இறப்பரினை ஏற்றுமதி செய்தது. 1957 இல் இரு நாடுகளும் இராஜதந்திர ரீதியான உறவினை மேம்படுத்திக் கொள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்துக் கொண்டன. பின்னர் 1962 இல் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டது. இதேபோன்று 1963 இல் சீன இலங்கை கடல்சார் ஒத்துழைப்பு ஒப்பந்தமும் 1981 இல் சீன இலங்கை சமூகமும் உருவாக்கப்பட்டன. பின்னர், 1982 பொது வர்த்தக ஒப்பந்தம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையொன்று 1984 இரு நாடுகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்டது. மேலும், 1991, 1992, 1996 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் இரு நாட்டுப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வகையில் இணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு இலங்கை சீன பொருளாதார உறவுகள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் 1994 இலங்கை சீன வர்த்தகம் மற்றும் முதலீட்டினை அதிகரிப்பதனை மிகப் பிரதான நோக்கமாகக் கொண்டு இலங்கை சீன வர்த்தக சபை உருவாக்கப்பட்டது. இவற்றுடன் 2007 எட்டு புதிய வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமை மற்றும் 2009 சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டமை என்பன பிரதான உடன்படிக்கைகளாகும்.

இலங்கை சீன நட்புறவின் வெளிப்பாடாக பல்வேறு நிதி, தொழில்நுட்ப உதவிகள் மற்றும் நன்கொடைகளையும் சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது. இவற்றில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH) நிலாபே நீர் வழங்கல் திட்டம், மத்திய தொலைதொடர்பு நிலையம், உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, ஜின் கங்கை உணவுப் பாதுகாப்புத் திட்டம், உடவளவ நன்நீர் மீன் வளர்ப்புத் திட்டம், பொலன்னறுவ நீர் விநியோகத்திட்ம், கிராமிய மின்திட்டங்கள், புத்தளம் அனல் மின் நிலையம், தேசிய கலாசார நிலையம், கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப் பாதை, ஹம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் மற்றும் அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களை நிதி உதவி செய்ததுடன் பலவற்றை நன்கொடையாகவும் சீனா வழங்கியுள்ளது.

## இலங்கையின் சீனாவுடனான வர்த்தகம்

இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகளாக கைத்தொழில் நாடுகளே காணப்பட்டன. 2013 இல் இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக கைத்தொழில் நாடுகள் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றம் இந்தியா என்பன இலங்கையின் பாரிய ஏற்றுமதி நாடுகளாகவிருந்தன. சமீப காலத்தில் இலங்கை சீன வர்த்த்தகம் மிகத் துரிதமாக அதிகரித்து வருகின்றது. உலக நாடுகளுடன் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான சீனாவின் வர்த்தகம் மிகக் கூடியதாகும். 2018 இல் சீனாவின் மொத்த ஏற்றுதியில் 19.2% சதவீத ஏற்றுமதியினை ஐக்கிய அமெரிக்காவுடன் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். உலகின் மிகப் பெரிய ஏற்றுதியாளராக சீனா உள்ளது. சர்வதேச வர்த்தக மைய அறிக்கையின் பிரகாரம் 2018 இல் சீனாவின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி 2.294 டிரிலியன் அமெரிக்க டொலர்களாகும். இவ் ஏற்றுமதிப் பெறுமதியில் 47.8% ஆசிய நாடுகளையும், 22.4% வட அமெரிக்காவினையும், 19.1% ஐரோப்பிய நாடுகளையும் சென்றடைந்துள்ளது. அதேபோல், உலகில் இரண்டாவது மிகப்பெரிய இறக்குமதி நாடாகவும் சீனா உள்ளது.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் 18 ஆவது இடத்தினையும் இறக்குமதியில் 2வது இடத்தினையும் சீனா பெற்றுள்ளது. 2018 இல் இலங்கை சீனாவிற்கும் இடையிலான வர்த்தகம் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்தியா, சீனா மற்றும் சிங்கப்பூர் என்பன பாரிய இறக்குமதி நாடுகளாகவும் தொடர்ந்து காணப்பட்டன. 1975 ஆம் ஆண்டு இலங்கையின் முதல்நிலை ஏற்றுமதி நாடாக சீனாவே இருந்தது. எனினும், 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்ட போது சீனா இலங்கையின் 3 ஆவது ஏற்றுமதி நாடாகவும் 2003ல் 35வது ஏற்றுமதி நாடாகவும் பின்தள்ளப்பட்டிருந்தது. சீனாவிற்கான தைத்த ஆடைகளின் ஏற்றுமதி வெகுவாகக் குறை வடைந்து சென்றமையே இம் மாற்றத்துக்கு காரணமாகக் கருதப்பட்டது. பின்னர், 2013 இல் சீனா இலங்கையின் 18 ஆவது ஏற்றுமதி நாடாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தீவிரமான விற்பனை மேம்படுத்தல் செயற்பாடுகள் காரணமாக

இலங்கையிலிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் அளவுகளும் அதிகரித்தன.

**அட்டவணை 1.1: இலங்கையின் வர்த்தகப் பங்காளிகள்-2018**

| ஏற்றுமதி நாடுகள் | ச.வீதம் | இறக்குமதி நாடுகள் | ச.வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 26% | இந்தியா | 19% |
| ஐரோப்பிய ஒன்றியம் | 16% | ஏனைய ஆசிய நாடுகள் | 25% |
| ஜேர்மனி | 5% | சீனா | 19% |
| பெல்சியம் | 4% | மத்திய கிழக்கு | 12% |
| ஐக்கிய இராச்சியம் | 8% | ஐக்கிய அமெரிக்கா | 2% |
| ஆசியா | 13% | ஐரோப்பிய ஒன்றியம் | 9% |
| மத்திய கிழக்கு | 10% | சிங்கப்பூர் | 6% |
| ஏனையவை | 16% | ஏனையவை | 2% |
| சீனா | 0.5% | ஐக்கிய அரபு இராச்சியம் | 8% |

*Source- Central Bank of Sri Lanka, 2018*

இலங்கை சீன ஏற்றுமதி கட்டமைப்பு கடந்த காலத்தில் பாரிய மாற்றத்திற்குட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சீனாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பினை நோக்கும் போது முன்னர் ஏறத்தாழ 40% ஏற்றுமதிகள் இறப்பர், தைத்த ஆடைகள் மற்றும் டைட்டானியம் தாதுப்பொருள் போன்ற மூலப்பொட்களாகவே இருந்தன. சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் வகைகளும் சமீபகாலங்களில் விரிவுபட்டுள்ளன. தேயிலை, இறப்பர் உற்பத்திகள், தும்பு, இரத்தினக்கற்கள், தங்க நகைகள், காபன் மற்றும் மீன் உற்பத்திகள் என்பன சீனாவிற்கான முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக மாற்றமடைந்துள்ளது.

இலங்கையின் இறக்குமதியில் ஆசிய நாடுகள் பெரும் பங்கினைக் கொண்டுள்ளன. இலங்கையின் சீனாவிற்கான ஏற்றுமதிகளுடன் நோக்கும் போது இறக்குமதிப் பெறுமதி அதிகமானதாகவுள்ள

அதேவேளை, சீனாவுடனான இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பும் மாற்றமடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தகதாகும். துணிவகை, உழவு இயந்திரம், வாகன உதிரிப் பாகங்கள், கணணி மற்றும் மின்சாதனங்கள், இயந்திர வகைகள் மற்றும் இரசாயணம் போன்றவை பிரதான இறக்குமதிப் பொருட்களாகவுள்ளன. அட்டவணை 1.2 இலங்கையின் சீனாவுடனான ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் வர்த்தக மீதி என்பவற்றின் போக்கினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 1.2 இலங்கை சீன வர்த்தகச் செயலாற்றுகை**

| **ஆண்டு** | **ஏற்றுமதி** (US$Mn) | **இறக்குமதி** (US$Mn) | **வர்த்தக மீதி** (US$Mn) |
|---|---|---|---|
| 2006 | 25 | 780 | -755 |
| 2007 | 36 | 921 | -885 |
| 2008 | 48 | 1107 | -1059 |
| 2009 | 59 | 881 | -822 |
| 2010 | 70 | 1241 | -1171 |
| 2011 | 104 | 2127 | -2023 |
| 2012 | 108 | 2562 | -2454 |
| 2013 | 121 | 3001 | -2880 |
| 2014 | 173.48 | 3,414.40 | -3240.92 |
| 2015 | 293.05 | 3,731.64 | -3438.59 |
| 2016 | 199.15 | 4,273.58 | -4074.43 |
| 2017 | 415.14 | 4,191.22 | -3776.08 |

*Source- Custom Statistics, Sri Lanka*

இக் காலப்பகுதியில் இலங்கையின் சீனாவிலிருந்தான இறக்குமதி 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. இலங்கையின் சீனாவுடனான வர்த்தக் மீதி மிகப் பாதகமான போக்கினைக் காட்டுகின்றது. சீனா இரண்டாவது பாரிய இறக்குமதிக்கான மூல நாடுகளாக விளங்கியதுடன் இலங்கையின் மொத்த இறக்குமதியில் 16.4 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்திருந்தது. சீனாவிலிருந்தான இறக்குமதிகள் 2,953 மில்லியன் ஐ.அ. டொலர்களாக 10.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த

வேளையில் சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக, பொறி மற்றும் சாதனங்கள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் கட்டடவாக்கப் பொருட்கள் என்பன காணப்பட்டது. ஏறத்தாள 300 வகையான பொருட்கள் சீனாலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. 2013 புள்ளிவிபரங்களின்படி 596 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான துணிவகை, 435 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான மின்சாதனங்கள், 250 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான தொலைபேசி உபகரணங்கள், தலா 97 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான உரவகைகள் மற்றும் தன்னியக்க தரவு நிரற்படுத்தும் இயந்திர வகைகள் என்பவற்றுடன் 81 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான படகு கட்டுமானப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன இதன் காரணமாக இருநாட்டுக்குமிடையிலான வர்த்தக மீதி இலங்கைக்கு பாதகமாக உள்ளதுடன் சமீபகாலங்களில் விரிவடைந்தும் செல்கின்றது. வரைபடம் 1.1 சமீபகால இலங்கை சீன வர்த்தகப் போக்கினைக் காட்டுகின்றது.

**வரைபடம் 1.1 இலங்கையின் சீனாவுடனான வர்த்தக இடைவெளி**




*Source: Custom Statistic, Sri Lanka*

**இலங்கை சீன சுதந்திர வர்த்தக உடன்படிக்கை**

உலகின் பல நாடுகள் சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைப் பேணி வருகின்றன. இலங்கையும் சீனாவுடன் நீண்டகால வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளது. இந்த வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் 2014 இல் இருந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளன. 2013 இல இலங்கையின் ஜனாதிபதி அதி மேதகு மகிந்த ராஜபக்ச அவர்கள் மேற்கொண்ட சீனாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது புதிய இருபக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றிற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2014 இறுதிப் பகுதியிலிருந்து செயற்படும் வண்ணம் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றிற்கான சாத்தியபாடுகள் தொடர்பான ஆய்வுகள் அனைத்தினையும் இரு நாடுகளும் நிறைவு செய்திருந்தன.

இலங்கை சீனாவுடன் அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ள எதிர்பார்த்திருக்கிறது. இதற்காக ஆறு பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நிறை வடைந்துள்ளமையுடன் மேலும் பேச்சு வார்த்தைகள் 2019 இல் நடைபெறவுள்ளன. இலங்கை - சீனா சுதந்திர வர்த்தக உடன் படிக்கை முக்கியமாகப் பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்புக்கள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு என்பனவற்றை உள்ளடக்க எதிர்பார்க்கிறது. இந்த உடன்படிக்கை மூலம் இலங்கையின் தொழில்முயற்சியாளர்கள் கூடிய அனுகூலங்ளைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை உற்பத்தியாளர்களுக்கு மிகப் பெரிய சந்தையாக சீனாவுள்ளது. புதிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு ஏற்றுமதி வாய்ப்புக்கள் அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. குறிப்பாக, தேயிலை, இறப்பர், தெங்கு, உயர்ரக ஆடைகள், ஆபரணங்கள் போன்ற இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு முழு வரிச்சலுகை பெற புதிய

ஒப்பந்தத்தில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருநாடுகளுக்குமான இருபக்க வர்த்தகத்தினை நோக்கும் போது கடந்த ஆண்டுகளில் இரு நாடுகளினதும் வர்த்தக அளவுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. எனினும் வர்த்தக இடைவெளியும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இவ் வர்த்தக இடைவெளியளவினைக் குறைத்துக்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையிலிருந்தான பல ஏற்றுமதிப் பொருட்களுக்கு சீனா தீர்வைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள நிலையில் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலமாக அப்பொருட்களுக்கான தீர்வைச் சலுகையினை பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் ஏற்றுமதி அனுகூலங்களை இலங்கை அதிகரித்துக் கொள்ளலாமென நம்பப்படுகின்றது.

இலங்கை சீன ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களுக்கான வெளிப்படுத்திய ஒப்பீட்டு அனுகூலச் சுட்டிகள் தற்போது கணிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நாடொன்றின் குறிப்பிட்ட ஏற்றுமதித் துறை ஒன்றின் பங்கு அத்துறை சார்பான உலக ஏற்றுமதிப் பங்கினை விட அதிகமாகவிருப்பின் குறிப்பிட்ட நாடு குறிப்பிட்ட ஏற்றுமதித் துறையில் வெளிப்படுத்திய ஒப்பீட்டு அனுகூலத்தினை அனுபவிக்கமுடியும். உலக மொத்த ஏற்றுமதியில் குறிப்பிட்ட நாடோன்றின் குறித்த ஏற்றுமதித் துறையின் பங்கினை உலக மொத்த ஏற்றுமதியில் அந் நாட்டின் ஏற்றுமதி துறையின் பங்கினால் பிரிக்கும் போது வெளிப்படுத்திய ஒப்பீட்டு அனுகூலச் சுட்டிகள் கணிப்பிடப்படும். இவ்விகிதம் ஒன்றைவிட கூடியதாயின் அந்நாடு குறிப்பிட்ட ஏற்றுமதித் துறையில் வெளிப்படுத்திய ஒப்பீட்டு அனுகூலத்தினை கொண்டுள்ளதாக குறிப்பிட முடியும். அட்டவணை 1.3 இரு நாடுகளினதும் ஒப்பீட்டு அனுகூலச் சுட்டிகளைக் காட்டுகின்றது. இதன்படி, விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திகள், மரக்கறி உற்பத்திகள், உணவு வகைகள், பிளாஸ்ரிக் மற்றும் றப்பர் உற்பத்திகள், ஆடைகள், கற்கள் மற்றும் கண்ணாடி ஆகிய பொருட்களில் ஒப்பீட்டு அனுகூலத்தினைப் பெற முடியும்.

மறுபுறமாக, தோல் மற்றும் தோல் உற்பத்திகள், பாதணிகள், உலோகங்கள், இயந்திரங்கள், மின்சாதனங்கள் மற்றும் ஆடைகள் என்பவற்றில் ஒப்பீட்டு அனுகூலத்தினை சீனா அனுபவிக்க முடியும்.

**அட்டவணை 1.3**

**இலங்கை சீன வர்த்தகப் பொருட்களின் வெளிப்படுத்திய ஒப்பீட்டு அனுகூலச் சுட்டிகள்**

| பொருள் | இலங்கை | சீனா |
|---|---|---|
| விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திகள் | 1.2 | 0.41 |
| மரக்கறி உற்பத்திகள் | 6.32 | 0.27 |
| உணவுப் பொருட்கள் | 1.16 | 0.44 |
| கனிப்பொருள் தயாரிப்புக்கள் | 0.3 | 0.12 |
| எரிபொருள் | 0.02 | 0.1 |
| இரசாயணங்கள் | 0.17 | 0.53 |
| பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் | 2.51 | 0.85 |
| தோல் மற்றும் தோல் உற்பதிகள் | 0.32 | 2.4 |
| மர மற்றும் மர உற்பத்திகள் | 0.75 | 0.71 |
| ஆடைகள் | 10.87 | 2.96 |
| பாதணிகள் | 0.52 | 3.73 |
| கண்ணாடி மற்றும் பெறுமதியான கற்கள் | 1.2 | 0.94 |
| உலோகங்கள் | 0.1 | 1.03 |
| இயந்திரங்களும் மின்சாதனங்களும் | 0.16 | 1.74 |

*Source: www.ft.lk*

இலங்கைக்கு கூடிய வர்த்தக அனுகூலங்களை தரவல்ல இவ்வொப்பந்தத்தின் நடைமுறைப்படுத்துவதில் இலங்கை கூடிய தந்திரோபாயங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயநிலை காணப்படுகின்றது. சீனாவின் விரிந்த சந்தைக்கான பொருள் உற்பத்தியை உயர்த்தும் வகையில் கூடிய முதலீட்டாளர்களை உள்வாங்கக்கூடிய உபாயங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஏற்கனவே, குறிப்பிட்ட சிலவகைப் பொருட்களுக்கான தீர்வையற்ற வர்த்தக தொடர்புகளைக்

கொண்டுள்ள பங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகியவற்றுடன் போட்டியிடவேண்டிய நிலை உருவாகலாம்.

இலங்கை புதிய வகைப் பொருட்களை அறிமுகம் செய்வதுடன் மிகத் தாக்கமிக்க மேம்படுத்தல் செயற்பாடுகளை கைக்கொள்ளலாம். ஏற்கனவே இலங்கை சீனாவுடனான வர்த்தகத்தில் பாதகமான வர்த்தக நிலுவையினையே அனுபவித்து வருகின்றது. புதிய ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்றுமதி அதிகரிக்காது இறக்குமதிகளின் பெறுமதி உயர்வடையும் நிலை ஏற்படும் எனின் இலங்கை மேலும் நெருக்கடிக்குள்ளாகலாம். ஏற்கனவே நடைமுறையில் இருந்த இறப்பர் அரிசி ஒப்பந்தம் மூலம் இலங்கை அதிக அனுகூலங்களைப் பெற்றுக் கொண்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

மேலும், தீர்வைகளற்ற விலையில் இடைநிலைப் பொருட்களையும், இயந்திர உபகரணங்களையும் இலங்கை முதலீட்டாளர்கள் பெறும் வாய்ப்புக்கள் இந்த ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்படவுள்ளமை எமது நாட்டு முதலீட்டாளர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமையும். எனினும், இலங்கை முதலீட்டாளர்கள் இந்த அனுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும், கடன் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமானதாகும்.

இலங்கை சீன பொருளாதார உறவுகள் நீண்டகால வரலாறு கொண்டுள்ள போதிலும் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் தொடர்பாக பல பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் தொடர்பாக இலங்கை பாதகமான வாத்தக நிலுவையினை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கைத்தொழில் ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள சீன உற்பத்திகளுடன் போட்டியிடத்தக்க வகையில் இலங்கையின் உற்பத்திகள் மேம்படுத்தப்படவில்லை. மிகப் பெரிய சந்தையாக சீனா காணப்பட்ட போதிலும் இலங்கையின் ஏற்றுமதி வகைகள் மட்டுப்படுத்தப்படடனவாகவே உள்ளன.

மேலும், இலங்கைக்கு சீனா பல நிதி உதவிகள் மூலமாக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இத்திட்டங்களுக்காக பாரிய கடன்களையும் சீனா வழங்கியுள்ளது. எனினும், இவற்றினூடான இலங்கை பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப முன்னேற்றம் மிகக் குறைவானதாகும். சீனா இலங்கைக்கான கடன்களை வழங்கும் போது சீன தொழிலாளர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென நிபந்தனைகளை விதிக்கின்றது. இதனால் உள்நாட்டு தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தினை இலங்கை இழந்து வருகின்றது. எனவே. தொழில்நுட்ப முன்னேற்றம் சார்பாக இலங்கை அனுகூலங்களைப் பெற முடியாது போகலாம். சீனாவினால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல திட்டங்களிலும் சீன தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஏனைய நாடுகளிலிருந்து பெறப்பட்ட வர்த்தக முதலீடுகள் மூலம் குறிப்பிடத்தக்களவு தொழில்நுட்ப முன்னேற்றம் சார்பான அனுகூலங்களை இலங்கை பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. வர்த்தக ரீதியில் நோக்கும் போது இந்தியா முதன்மை பெறுவது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் இலங்கையின் அமைவிடம் பலமான நாடுகள் பலவற்றின் கவனத்திற்குட்பட்டுள்ளது. சமீப காலங்களில் இலங்கையின் பிரதான முதலீட்டாளராகவும், உதவி வழங்குளராகவும் சீனா செயற்படும் அதேவேளை சர்வதேச அரசியல் விடயங்களிலும் இலங்கைக்கு முழு ஆதரவினைத் தரும் நாடாகவும் மாறியுள்ளது. சீனா தனது பொருளாதார நலன்களை மேம்படுத்தும் வகையிலும், இந்து சமுத்திரப் பிரதேசத்தில் ஆதீக்கத்தினை பெற்றுக்கொள்ளும் வகையிலும் இலங்கைக்கு உதவுதாக கருதப்படுகின்றது. இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவரின் கருத்துப்படி இலங்கை சீனாவிடமிருந்து துறைமுகங்களையும், விமானநிலையங்களையும் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியுமே தவிர பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அறிவுரைகளைப் பெற முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கு இதுவொரு முக்கிய கருப்பொருளாகும்.

இத்திட்டங்களுக்காக பாரிய கடன்களையும் சீனா வழங்கியுள்ளது. எனினும், இவற்றினூடான இலங்கை பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப முன்னேற்றம் மிகக் குறைவானதாகும். சீனா இலங்கைக்கான கடன்களை வழங்கும் போது சீன தொழிலாளர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென நிபந்தனைகளை விதிக்கின்றது. இதனால் உள்நாட்டு தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தினை இலங்கை இழந்து வருகின்றது. எனவே. தொழில்நுட்ப முன்னேற்றம் சார்பாக இலங்கை அனுகூலங்களைப் பெற முடியாது போகலாம். சீனாவினால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல திட்டங்களிலும் சீன தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஏனைய நாடுகளிலிருந்து பெறப்பட்ட வர்த்தக முதலீடுகள் மூலம் குறிப்பிடத்தக்களவு தொழில்நுட்ப முன்னேற்றம் சார்பான அனுகூலங்களை இலங்கை பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. வர்த்தக ரீதியில் நோக்கும் போது இந்தியா முதன்மை பெறுவது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் இலங்கையின் அமைவிடம் பலமான நாடுகள் பலவற்றின் கவனத்திற்குட்பட்டுள்ளது. சமீப காலங்களில் இலங்கையின் பிரதான முதலீட்டாளராகவும், உதவி வழங்குளராகவும் சீனா செயற்படும் அதேவேளை சர்வதேச அரசியல் விடயங்களிலும் இலங்கைக்கு முழு ஆதரவினைத் தரும் நாடாகவும் மாறியுள்ளது. சீனா தனது பொருளாதார நலன்களை மேம்படுத்தும் வகையிலும், இந்து சமுத்திரப் பிரதேசத்தில் ஆதீக்கத்தினை பெற்றுக்கொள்ளும் வகையிலும் இலங்கைக்கு உதவுதாக கருதப்படுகின்றது. இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவரின் கருத்துப்படி இலங்கை சீனாவிடமிருந்து துறைமுகங்களையும், விமானநிலையங்களையும் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியுமே தவிர பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அறிவுரைகளைப் பெற முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கு இதுவொரு முக்கிய கருப்பொருளாகும்.

எனவே, இலங்கையுடனான வர்த்தகத்தில் நேர்விளைவுகளை அனுபவிக்கும் வகையில் இரு நாடுகளுக்குமான சுதந்தர வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்காக இலங்கை தீவிரமாக சிறந்த தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

**உசாத்துணைகள்**


Fernando, S. N., 2010, China’s Relations with Sri Lanka and the Maldives: Models of Good Relations among Big and Small Countries, CHINA REPORT 46: 3: 285–297 SAGE Publications Los Angeles

Balassa, B., 1965, Trade Liberalisation and Revealed Comparative Advantage, The Manchester School, 33, 99-123.

Kelegama, Saman., 2009, ‘China-Sri Lanka Economic Relations: An Overview’, presentation made to the Sri Lanka–China Business Forum, organized by the Ceylon Chamber of Commerce, 25 September, Colombo, http://www.ips.lk

Samaranayake, N. (2011). Are Sri Lanka's Relations with China Deepening? An Analysis of Economic, Military, and Diplomatic. Asian Security. 7:2.119-146.

Suryanarayan. V., 2014, Explaining china’s growing influence in Sri Lanka, Centre for Asia Studies, India www.asiastudies.org/

## சுற்றுலாத்துறையில் பயண முகவர்களின் பங்கு

*கணேசமூர்த்தி கஜேந்தினி*[3]

### அறிமுகம்

சுற்றுலாத்துறை, ஒரு நாட்டின் உயர் பொருளாதார நிலை மற்றும் நிலைத்துநிற்கும் பொருளாதார வளர்சியை அடைய நேரான பங்களிப்பினை வழங்கும் ஒரு துறையாகும். இலங்கையைப் போன்ற பல வளரும் நாடுகளுக்கு நிலைத்துநிற்கும் சுற்றுலாத்துறையுடனான அபிவிருத்தி, வறுமைக்குறைப்பு மற்றும் சுற்றுச்சூழலின் நிலைத்துநிற்கும் தன்மை ஆகியவற்றின்மீது தெளிவான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுலாச் சந்தை தொடர்பிலான ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் சுற்றுலாத்துறைக்கான பயண விருப்புக்கள் தொடர்பில் அறுதியான முடிவினைப் பெறுவதென்பது இன்றுவரை சிக்கலானதானவே உள்ளது. ஏனெனில் ஆய்வு முடிவுகள் தவிர்ந்த ஏனைய பல முக்கிய காரணிகள் சுற்றுலாப்பயணிகள் தமது பயண விருப்புக்களாக எவற்றினைக் கொண்டுள்ளார்கள் என்பதனைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வரிசையில் பயண முகவர்கள், சுற்றுலாப்பயணிகள் விரும்பக்கூடியவகையில் சிறந்த மற்றும் மிகவும் பிரபலமான சுற்றுலா இடங்கள் பற்றி தெரிந்துகொள்வதுடன் அவற்றினை சுற்றுலாப்பயணிகளுக்கு அறியத்தருவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதற்கிணங்க, சுற்றுலா செயல்பாட்டுத்துறையில் தற்போதைய போக்குகள் தொடர்பில் பயண முகவர்கள் எப்போதும் புதுப்பித்துக் கொண்டிருக்கவேண்டும். பயண முகவர்கள் ஏராளமான பரிமாற்றங்கள் மற்றும் வருமான சேர்க்கைக்கு உதவுவதன் மூலம் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் மேலும் முக்கிய பங்கு வகிக்கின்றுது (பண்டார மற்றும் சில்வா, 2016).

---

[3] விரிவுரையாளர் (தகுதிகாண்), பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

சுற்றுப்பயண வர்த்தகம், ஒன்றிலொன்று தங்கிய பயண முகவர் மற்றும் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் ஆகிய இருவேறு துறைகளை உள்ளடக்கியது. இவ்விரு துறைகளும் ஒருங்கிணைந்த பல துணைத்துறைகளை (தங்கும் விடுதிகள், திரையரங்கு முன்பதிவு முகவர்கள், சுற்றுலா வழிகாட்டல், சுற்றுலா முகாமை, விமான ஆசன முன்பதிவுத் தரகர்கள், ஊக்கமளிக்கும் பயண வீடுகள்) உள்ளடக்கியது. பயண முகவர் மற்றும் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் ஆகியோர் சுற்றுலா உற்ப்பத்திப் பொருளின் மேம்படுத்தினராகவும் மற்றும் ஆக்க உதவியாளர்களாகவும் காணப்படுகின்றனர் (லியோனார்ட் மற்றும் கார்சன், 1997).

## பயண முகவர்கள்

சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் மொத்த விற்பனையாளராக, சுற்றுலாப் பயண பொருட்த் தொகுதியில் உள்ளடங்கும் ஒவ்வொரு தனிப்பட்ட கூறுகளையும் ஒன்றாகக் கொள்வனவு செய்து அவற்றை இணைத்து சுற்றுலாப் பயணத் தொகுப்பாக (package) சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் போது, அதனை சில்லறை விற்பனையாளர்களாக அவற்றினைப் (பயணத் தொகுப்பு) பெற்றுக்கொடுத்து அதன்மூலம் கமிசன் உழைப்பவர்கள் பயண முகவர்களாகும் (லியோனார்ட் மற்றும் கார்சன், (1997) மற்றும் நெகி, (2004)).

சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் தமது பயணத் தொகுப்பினை உள்நாட்டு ஊடகங்கள் மற்றும் இணையமூடாக விளம்பரப்படுத்தும் அதேவேளை, பயண முகவர்கள் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்களுடன் இணைந்து நிதி உதவிகளை வழங்குவதுடன், குறித்த பயணத் தொகுப்பினை ஊடகங்களைப் பயன்படுத்தி மேலும் விளம்பரப்படுத்தி மேம்படுத்துவர். பயண முகவர்கள் விமான ஆசன டிக்கட், திரையரங்கு டிக்கட், ரெயில் டிக்கட், பயணக் கப்பல் டிக்கட், விற்பனைக் கமிசன் என்பவற்றுக்கான முகவர்களாகவும் காணப்படுவர் (லியோனார்ட் மற்றும் கார்சன்,1997).

பயண முகவர்கள் தங்கும் விடுதி சேவை, விமான சேவை, ஏனைய போக்குவரத்து சேவைகள், சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் சேவை போன்ற சுற்றுலாச் சேவைகளினுடைய அசல் (original) விநியோகத்தர் அல்லது நேரடியான வழங்குணராகவும் காணப்படுவர் (நெகி, 2004).

வரைபடம் 01: சுற்றுலாத்துறையில் பயணமுகவர்கள்




*மூலம்: நெகி, (2004)*

**பயண முகவரின் ஒழுங்கமைப்பு**

பயண முகவரின் சேவை வழங்கலின் ஒழுங்கமைப்பு ஒவ்வொரு அலகுக்கு அலகு வேறுபடுவதுடன் இவ்வொழுங்கமைப்பு குறித்த பயண முகவரினால் வழங்கப்படும் வியாபாரத்தினுடைய அளவு (size) மற்றும் வகையில் தங்கியிருக்கும். பயண முகவர்களினுடைய அடிப்படை ஒழுங்கமைப்பு ஒரேமாதிரியாகக் காணப்படும். அதாவது பயண முகவர் நிறுவனம் பொதுவாக சில்லறை பயண முகவர்களின் தொழிற்பாடுகளையும் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினரின் தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படும்.

**சில்லறை பயண முகவர்:** சில்லறை பயண முகவர் என்பது, யார் சுற்றுலா சேவை வழங்கலின் முக்கிய சார்பாக அல்லது முதன்மையானவராக தொழிற்படுகின்றாரோ அம் முகவர் நிறுவனமாகும். தங்கும் விடுதி சேவை, விமான சேவை, சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர் சேவை போன்ற சுற்றுலாச் சேவைகளினுடைய அசல் விநியோகத்தர் அல்லது வழங்குணராகக் காணப்படுவர். சில்லறை பயண முகவர் முதன்மைச் சேவைகளை விற்பனை செய்வதுடன் அதற்குரிய வெகுமதியினை ஒவ்வொரு விற்பனை மீதான கமிசன் மூலம் பெற்றுக்கொள்வர்.

**சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்:** சுற்றுலாப் பயண பொருட்த் தொகுதியில் உள்ளடங்கும் ஒவ்வொரு தனிப்பட்ட கூறுகளையும் ஒன்றாகக் கொள்வனவு செய்து அவற்றை இணைத்து சுற்றுலாப் பயணத் தொகுப்பாக சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குபவர்கள் பயண முகவர்களின் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்களாகும். பயண முகவர்கள் குறித்த பயணத் தொகுப்பினை வழங்குவதற்கான வெகுமதியினை, சுற்றுலாப் பயண உற்பத்திக் கூறுகளை ஒவ்வொரு தனிப்பட்ட சேவையாக வழங்கியவர்களுக்கு செலுத்திய விலையுடன் இலாபத்தினைக் பெறும் வகையில் குறித்த பகுதி விலையினைச் சேர்ப்பதன் மூலம் (Mark-up), பெற்றுக்கொள்வர்.

இவ்வாறு, சில்லறை பயண முகவர் சில்லறை விற்பனையாளர்களாகவும், சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினார் குறித்த பயணத் தொகுப்பினுடைய உற்ப்பத்தியாளராகவும், மொத்த விற்பனையார்களாகவும் காணப்படுவர்.

பெருமளவில் பயண முகவர்கள் குறிப்பிட்ட பொருட்த்தொகுதிக்கான மொத்த செலவில் குறித்த வீதத்தினை பெறுவதன்மூலமே கமிசனை பெற்றுக்கொள்வர். இவ்வீதம் 7- 40 வரை காணப்படும் அதேவேளை ஊக்கக் கமிசனாகக் (incentive commission) காணப்படும். கடவுச்சீட்டு மற்றும் வீசா பெறுதல் போன்றவற்றிற்காக கமிசன் விதித்தல், ஏனைய சேவைகள்மீது கமிசன் விதித்தல், தகவல்களை வழங்குதல் மீது கமிசன் விதித்தல் மற்றும் வெளியீடுகள் மீது முன்பதிவுகள் கிடைக்காதபட்சத்தில் அவற்றிற்கான நேரச்செலவு

ஏற்பட்டிருக்குமாதலால் அதற்கான நட்டஈடு பெறுதல், சுற்றுலாச் சேவைகளை விற்பதன் மூலமான வருமானம், சுற்றுலாவுடன் தொடர்புடைய பொருட்களை (பரிசுப் பொருட்கள், புத்தகங்கள், பயணப் பெட்டிகள்) விற்பனை செய்தல் என பல்வேறுவகைகளில் வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளுவர். மேலும், வாடிக்கையாளர்கள் சார்பில் பணத்தினை வழங்கும்போது குறித்த பணம் அவர்களிடமிருந்து செலுத்தப்படும் வரையிலான காலத்திற்குமாக, வாடிக்கையாளர்களின் முதலீட்டிலிருந்து வருமானத்தினைப் பெறுவர் (குவெண்டா, எட் அல்., 2003).

வரைபடம் 02: சுற்றுலாத்துறையில் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்களின் பங்கு




*மூலம்: நெகி, (2004)*

பயண முகவர்கள் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்களாகவும் தொழிற்படுவர். இதன்படி தமக்கே சொந்தமான சுற்றுப் பயணத் தொகுப்பை வழங்கும்போது முழுமையான மார்க்கப்பினைப் (Mark-up) பெறுகின்றார்காளா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வார்கள். இவ்வீதம் சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினர்களிடமிருந்து பெறும் கமிசனைவிட உயர்வீதமாகக் காணப்படும்.

பயண முகவர்களது ஒழுங்கமைப்பு நடைமுறைப்படுத்தினர் துறை, சர்வதேச பயணிகள் முன்பதிவுத்துறை மற்றும் உள்நாட்டு சுற்றுப்பயண பயணிகள் முன்பதிவுத் துறை என மூன்று துறைகளுக்குள் பிரிக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 03: பயண முகவர் ஒழுங்கமைப்பு




*மூலம்: நெகி, (2004)*

**சர்வதேச பயணிகள் முன்பதிவுத்துறை**

சர்வதேச பயணிகள் முன்பதிவுத்துறை சர்வதேச பயணத்தினை நோக்கமாகக் கொண்டுள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதில் தேர்ச்சிபெற்றவர்களாகக் காணப்படுவர். இத்துறை வெவ்வேறுபட்ட சேவைகளை வழங்கவேண்டியுள்ளதனால் ஆவணங்கள் அலகு, முன்பதிவு அலகு, விசா அலகு மற்றும் விற்பனை அலகு என மேலும் உப பகுதிகளாக பிரிக்கப்படுகின்றது.

**ஆவணங்கள் அலகு**

சுற்றுப்பயணிகள் சர்வதேச பயணங்களை மேற்கொள்வதற்கு பல ஆவணங்கள் தேவைப்படுவதுடன் பல்வேறு முறைமைகளையும் பூர்த்திசெய்யவேண்டியுள்து. இவ்வலகு வெளிநாட்டு சுற்றுப்பயணிகளுக்குத் தேவையான எல்லா வகையான

ஆவணங்களையும், தொடர்புபட்ட முறைமைகளையும் (formalities) இணைத்து வழங்குகின்றது. நபர் யாராவது வெளிநாட்டுப் பயணம் செல்ல வேண்டிய தேவை ஏற்படின் குறித்த ஆவணப்பிரிவுடன் தொடர்புகொள்ள வேண்டும். இதன்நிமித்தம் குறித்த பிரிவின் முகவர் குறித்த சுற்றுப்பயணத்திற்கான காரணத்தினை அறிந்துகொள்வதுடன் அதற்கிணங்க பயணச்சீட்டினைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் தொடர்பாக அறிவுரை வழங்குவார். ஏனெனில் ஆவணங்கள் மற்றும் முறைமைகள் பயணநோக்கத்திற்கு ஏற்ப வேறுபடும். உயர்கல்வி, இடப்பெயர்வு, வியாபாரம் மற்றும் வைத்திய சிகிச்சை போன்ற வேறுபட்ட நோக்கங்களிற்கு ஏற்ப ஒவ்வொரு நோக்கங்கத்திற்கு ஏற்பவும் ஆவணங்களுடன் மற்றும் முறைமைகளையும் அரசின் அனுமதியுடன் கூடிய பயணத்தினை மேற்கொள்ள உதவும்.

உதாரணமாக உயர்கல்விக்காக பயணம் மேற்கொள்ளும் ஒரு நபருக்கு பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டுவர்.

- பல்கலைக்கழகத்தின் அனுமதி சேர்க்கை
- புலமைப்பரிசில் அறிவிப்பு கடிதம்
- தொழில்வழங்குனர் சான்றிதழ்

இவ்வாறு பயண முகவர், போக்குவரத்து அலுவலகத்துடன் பேச்சுவார்த்தை செய்வதற்கான அதிகாரத்தினை கொண்டிப்பதனால் பயணிகளின் சார்பாக தொடர்புகொள்வதுடன்,

- சர்வதேச கடவுச்சீட்டினை வசதிப்படுத்தல்.
- ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து அவசியமான அனுமதியினைப் பெறல் (இடப்பெயர்வு அலுவலகம்).
- அனுமதியினைப் பெற்ற பின்பு பயணச்சீட்டினை முன்பதிவ செய்வதன் பொருட்டு செயற்பாட்டு முன்பதிவ பிரிவிற்கு மாற்றுதல்.

போன்ற செயன்முறைகளையும் மேற்கொள்ளுகின்றது.

## முன்பதிவு அலகு

முன்பதிவு அலகு போக்குவரத்து தொடர்பான முன்பதிவு மற்றும் உணவு தங்குமிட முன்பதிவு போன்றவற்றிற்கான முன்பதிவுகளுடன் தொடர்புடையது. விமான நேர அட்டவணை மற்றும் வெவ்வேறுபட்ட தூரப் பயணங்களிற்கான கட்டணங்கள், உணவு தங்குமிடம் மற்றும் கட்டணவிதிப்புக்களுடன் தொடர்பான தகவல்களுடன் இணைத்து முன்பதிவுகளை மேற்கொள்ள உதவுகின்றது.

மேற்குறிப்பிட்ட தகவல்களுடன் விமானத்தின் வருகை மற்றும் புறப்பாடு, தங்குமிடம் தொடர்புடையதாக பயணத்திட்டத்தினை பொருத்தமான விமானத்தொடர்புடன் வரையப்படும். அத்துடன் விமானக்கட்டணம் மற்றும் தங்குமிடத்திற்கான கட்டணச்செலவு போன்றவற்றிற்கான தோராயமான செலவினையும் மதிப்பிடும். மேற்படி மதிப்பீட்டின் ஒப்புதலுடன் தயாரிக்கப்பட்ட பயணத்திட்டம் தட்டச்சு செய்யப்பட்டு அதன் பிரதி பயணிகளுக்கான குறிப்புக்காக வழங்கப்படும். இது **பயண விபர ஏடு** என அழைக்கப்படும்.

முன்பதிவுப்பிரிவின் அடுத்தபடியாக ஆசணங்களிற்கான முன்பதிவு காணப்படுகின்றது. இப்படிமுறையூடாக விமானசேவை மற்றும் ஆசணங்களை பயண விபர ஏட்டிற்கிணங்க முன்ஏற்பாடு செய்கின்றது. குறித்த விமானசேவை பிரயாணிகளினுடைய முழுதிட்டநிரலினையும் பெற்றுக்கொள்வதுடன், இதன் அடுத்தபடியாகத் தொடர்புடைய அலுவலகருக்கு முன்பதிவு செய்வதற்காக அனுப்பப்படும். விமானசேவை ஆசண முன்பதிவை உறுதிப்படுத்தி பயண முகவருக்கு அனுப்புவதுடன் இதற்கிணங்க இப்பதிவின் பற்றுச்சீட்டினை பயண முகவர் குறிப்பிட்ட நபருக்கு கையளிப்பதுடன், விமானத்தின் விபரங்கள் உள்ளடங்கலாக அப்பற்றுச்சீட்டு அமையும்.

இதன்படி பற்றுச்சீட்டு பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருக்கும்.

- பயணியின் பெயர்
- பயணிக்கும் இடம்

- திகதி
- விமான இலக்கம்
- நேரம்
- கடவுச்சீட்டு இலக்கம்
- முகவரினது குறியீட்டு இலக்கம்
- கட்டணம்
- அனுமதி இலக்கம்

குறிப்பிட்ட பற்றுச்சீட்டிற்கு அடுத்தபடியாக விமானசேவை பயணச்சீட்டினை பயண முகவருக்கு வழங்கும். அதற்கு அடுத்தபடியாக பற்றுச்சீட்டினை பரிசீலித்தபின் பிரயாணிக்கு பயணச்சீட்டினை கையளிப்பர். குறித்த பிரயாணி பயணச்சீட்டிற்கான கட்டணத்தினை வழங்குவர். மேலும் பயண முகவர் வழிகாட்டல் மற்றும் சேவைகளை பயணிகளுக்கு வழங்குவதுடன் அதற்கான மேலதிக கட்டணம் விதிக்கப்படுவதில்லை.

**விசா அலகு**

விசாப்பிரிவின் கீழ் வெவ்வேறு நாடுகளுக்கான விசா பெறுவதற்கான முறைமைகளுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களும் பேணப்படுவதுடன், பயணிகளுக்கான விசாவினைப் பெறுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயன்முறைகளுடன் தொடர்புபடுகின்றது.

**விற்பனை அலகு**

விற்ப்பனைப்பிரிவின் தொழிற்பாடு, பயண முகவருக்காக அதிக வியாபாரத்தைப் பெறுவதாகும். இதற்கிணங்க சுற்றுலாத்துறையில் எங்கு வியாபாரம் மூலம் வருமானம் ஈட்ட முடியுமோ அத்தகு எல்லா மூலங்களுடன் இப்பிரிவு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கும். இப்பிரிவில் பணிபுரியும் அலுவலகர் விற்பனை அதிகாரி அல்லது விற்பனை நிர்வாகி என அழைக்கப்படுவர். இவ்விற்பனைப்பிரிவு சந்தையிலுள்ள வியாபாரத்தினுடைய மூலங்களைத் தொடர்புகொண்டு குறிப்பிட்ட பயண முகவருடன் வியாபாரம் செய்வதற்கு பேரம் பேசுவார்கள்.

குறிப்பிட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் விற்பனை நிர்வாகிகள் மகிழ்ச்சியுடன்கூடிய ஆளுமை கொண்டவர்களாகவும் நன்றாக உடை அணிபவர்களாகவும், ஆற்றல் வாய்ந்தவர்களாகவும், புத்திசாலித்தனத்துடன்கூடிய உழைப்பாளிகளாகவும், அதிகளவு வியாபாரம் சார் தொடர்புகளைக் கொண்டவாடகளாகவும் காணப்படுவர்.

**உள்நாட்டு போக்குவரத்து முன்பதிவு**

இப்பிரிவு உள்நாட்டு விமானப் போக்குவரத்து மற்றும் உள்வாரியான விமானச்சேவையுடன் கூடிய சேவைகளுடன் மட்டும் தொடர்புடையது. தொடர்ந்தேர்ச்சியாக பயணிகளுடன் தொடர்பினைக்கொண்டு பயணச்சீட்டுக்களை விநியோகிக்கின்றது. பொதுவாக அதிகளவான விமானச்சேவைக்கான பயணச்சீட்டுக்களைக் கொண்டிருப்பதுடன் அவற்றினை விமானச்சேவை சார்பாக பிரயாணிகளுக்கு இப்பிரிவு விநியோகிக்கின்றது.

**பயணச்சீட்டு பெறுவதற்கான நடைமுறைகள்**

ஒருநபர் உள்நாட்டு விமானசேவை மூலம் பயணம் செய்ய ஆர்வம் கொண்டிருக்கும்போது அந்நபர் பயணமுகவருடன் தொடர்புகொள்ள வேண்டியிருப்பதுடன் விமானப் பயணச்சீட்டுக்கான கேள்வியை எழுப்புவர். இதன்பொருட்டு பெயர், இடம், திகதி மற்றும் விமானம் உள்ளிட்ட தேவையான தகவல்களை பயண முகவரிற்கு வழங்குதல் வேண்டும். பின் பயண முகவர் ஆசண முன்பதிவிற்காக குறிப்பிட்ட திகதி மற்றும் விமானத்துடன் தொடர்பாக விமானசேவையுடன் தொடர்புகொண்டபின் ஆசனம் இருக்கும்பட்சத்தில் இருப்பிலுள்ள பயணச்சீட்டினை குறித்த பயணியின் பெயர் மற்றும் பயணச்சீட்டு இலக்கத்தினை விமானசேவைக்கு அறிவிக்கும்.

மேலும் குறித்த பதிவிற்காக தொலைநகல், தகவல் அனுப்புதல் அல்லது கடிதம், மின்னஞ்சல் போன்ற ஏதாவது பொருத்தமுடைய தொடர்பாடலின்மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளும். குறித்த ஆசணப்பதிவு நிச்சயப்படுத்தப்படும் போது வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன், பயணச்சீட்டு அவர்களிடம் கையளிக்கப்படும்.

பயணச்சீட்டு முன்பதிவுடன் மேலதிகமாக பயணமுகவர், சுற்றுப்பயணிகள் வேறு ஏனைய இடங்களிற்கான பயணத்தின்பொருட்டு தங்கும் விடுதி மற்றும் ஏனைய போக்குவரத்து (கார், பஸ்) போன்ற அவசியமான ஒதுக்குகளையும் மேற்கொள்ளுவர். வாடிக்கையாளருக்கு தேவையான ரசீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதுடன் மூலப்பிரதி வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். குறித்த வாடிக்கையாளர் ரசீட்டுக்களை தொடர்புடைய தங்கும் விடுதி மற்றும் உள்நாட்டு போக்குவரத்து அலகிற்கு கையளிப்பதுடன் மேலும் குறித்த தங்கும் விடுதி அல்லது உள்நாட்டு போக்குவரத்து அலகிலோ எதுவித கட்டணங்களும் செலுத்தவேண்டியதில்லை. பற்றுச்சீட்டு வாடிக்கையாளரினால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்படும் போது குறித்த சேவைக்கான கட்டணமாக அது அமையும். பயண முகவர் கட்டணத்தினை செலுத்துவதுடன் மற்றும் அக்கட்டணத்தினை பயணிக்கும் வாடிக்கையாளரிடமிருந்து முன்பதிவுச்சீட்டு வழங்கும்போதே பெற்றுக்கொள்ளும்.

இவ்வாறு பல்வேறுபட்ட செயன்முறைகளுடன் இணைந்தவாறு ஆசனமுன்பதிவு, டிக்கட்டினை கொள்வனவு செய்தல், தங்குமிட முன்பதிவு, இடங்களிற்கு இடையிலான போக்குவரத்து மற்றும் அனைத்து சேவைகளுக்குமான கட்டணங்கள் செலுத்துதல் போன்ற எதுவிதமான நடைமுறைகளுடனும் சுற்றுப்பயணிகள் நேரடியாகத் தொடர்புபடாமல் சுற்றுப்பயணத்திற்கான சேவையினை பயண முகவரினூடாகப் பெற்றுக்கொள்வர். இவ்வாறு பல்வேறுபட்ட செயன்முறைகளை பயணிகளின் தேவைக்கு ஏற்ப இணைத்தவாறு தொகுதியாக வழங்குவதன்மூலம் அனைத்து சேவைகளையும் எளிமையாக்குகின்றது.

**சுற்றுலா நடவடிக்கைகள்**

சுற்றுலா நடவடிக்கை பயண முகவர்களினுடைய மற்றுமொரு முக்கிய பிரிவாகக் காணப்படுகின்றது. குறித்த அலகின் பிரதானமான தொழிற்பாடு வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளைப் பெறுவதுடன், அவர்களின் ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்குமான தேவைகளுக்கு ஏற்ப தங்குமிடவசதி, போக்குவரத்து வசதிகள், இடங்களைப் பார்வையிடல் (sightseeing) போன்ற சேவைகளை நாடுமுழுவதும்

வசதிப்படுத்துதலாகும். சுற்றுலா நடவடிக்கைகள் திணைக்களத்தின் சேவை மிகவும் எளிமையானதாகக் காணப்படும்.

**பயண முகவரின் பிரதான தொழிற்பாடுகள்**

பயண முகவரின் பிரதான செயற்பாடுகளாக முகவர்காகத் தொழிற்படுதல், சுற்றுலாப் பொருட்கள் மற்றும் சேவைகளை அவற்றின் நிரம்பலாளர்கள் சார்பில் விற்பனை செய்தல் என்பனவாகும். இவற்றை இருவேறு பிரதான தொழிற்பாடுகளாக பிரித்துநோக்கப்படுகின்றது.

**01. நடுநிலையாளராக தனிப்பட்ட சேவைகள் மீது கமிசனை (விடுதி, போக்குவரத்து நிறுவகம், விமானப்பயணச் சீட்டு) விதிக்கிறது.**

வரைபடம் 04: பயண முகவரின் தொழிற்பாடுகள்




*மூலம்: நெகி, (2004)*

02. **ஒரு ஒழுங்கமைப்பாளராக, பயண முகவர் தமது சொந்த ஆரம்பத்தில் மற்றும் சொந்த இடரிடன் கூடிய சுற்றுலாவினை வாடிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்கிறது.**

- குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட திட்ட அட்டவணைக்கு ஏற்ப போக்குவரத்து ஊடகம், விடுதி, சுற்றுலா (excursion), பொழுதுபோக்கு மற்றும் ஏனைய நிகழ்வுகளைத் தெரிவுசெய்கின்றது. இது ஒரு சுருக்கமாக ஒரு பட்டியலில் அல்லது அட்டவணையில் முன்மொழியப்படுகின்றது.
- இங்கு கமிசன் விதிக்கப்படுவதற்கு மேலதிகமாக, செலவீனத்துடன் எல்லை இலாபமும் சேர்க்கப்படுகின்றது.

பயண முகவர்கள் சில்லறை விற்பனையாளர்களாகத் தொழிற்பட்டாலும், இருப்பாக (stock) வைத்துக்கொள்வதில்லை. அதாவது வாடிக்கையாளர்களிடமிருந்து குறித்த பொருட் சேவைகளுக்கு கேள்வி எழுப்பப்படும்வரை, அவற்றினை நிலம்பலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்துவைத்திருக்கமாட்டார்கள்.

**பயண முகவரின் சேவைகள்**

பயண முகவரின் சேவைகளை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

- அடிப்படை போக்குவரத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை ஏற்பாடு செய்தல்.
- தனிப்பட்ட பயண விபர ஏட்டினை தயாரித்தல்
- தனிப்பட்ட முறையில் அழைத்துச்செல்லுதல் மற்றும் குழு சுற்றுப்பயணங்களை ஒழுங்குசெய்தல்.
- தங்குமிட வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- நவீன பயணத்தின் பல விபரங்களை கையாளுதல் மற்றும் ஆலோசனை செய்தல்.
  உதாரணம்: பயணப்பொதி, காப்புறுதி, சாமான்ய ஆய்வுப் பொருள், பயணிகள் காசோலைகள், வெளிநாட்டு நாணய

பரிமாற்றம், ஆவணங்கள், சுகாதார விதிமுறைகள் (தடுப்பு ஆயத்தங்கள்)

- ரயில்வே அட்டவணை, விமானக் கட்டணங்கள், தங்கும் விடுதிகள் கட்டணங்கள் போன்றவற்றை விளக்குவதற்கு தொழில்சார் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்துகிறது.

பயண முகவர் நிறுவகத்தின் முகாமையாளர், சுற்றுலா சேவை வழங்கலின் தரத்தினை பேணுவதிலும் மற்றும் சுற்றுலாவின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நேர்த்தியான பயணத்தினை வழங்குவதற்குமான பொறுப்புடையவராக காணப்படுவார். ஒரு தகுதியான நல்ல முகாமையாளர், பயண முகவர் நிறுவனம் ஒரு சேவை வழங்கும் நிறுவனம் என்பதனையும், நல்ல முகாமைத்துவத்தின் முக்கியத்துவங்கயையும் நன்கு தெரிந்துவைத்திருப்பார், முகாமையாளர், சுற்றுலா பொருட்த்தொகுதியின் பொறுப்புக்கள் தொடர்பாக சுற்றுப்பயண நடைமுறைப்படுத்தினருடனும், நிரம்பலாளர்களுடனும் பகிர்ந்துகொள்வார். மேலும், முகாமையாளர் பொதுப்பட்டயம் (public charter) மற்றும் பயணமுடிவின் பின்னர் வாடிக்கையாளர்கள் சுற்றுலாசேவை வழங்கலிற்கான வெகுமதியினை வழங்குவார்களா என்பதிலும் கவனத்தினை எடுப்பார்கள்.

**முடிவுரை**

பயண முகவர் நிறுவனத்தின் பெறுமதி அங்குள்ள இயந்திரங்களிலோ அல்லது சரக்குகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக அந்நிறுவனம் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வியாபாரத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும் இந்நிறுவனத்தின் பெறுமதி வாடிக்கையாளர்களுடனான தொடர்பு, கடந்தகால செயல்த்திறன் மற்றும் எதிர்வுகூறக்கூடிய வியாபாரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

பயண முகவர்கள் சுற்றுலா மற்றும் பயணம் சார் அறிவு மற்றும் நிபுணத்துவத்தினைக் கொண்டிருப்பதுடன், சுற்றுலாச் சேவைகளை வழங்குபவர்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொண்டு காணப்படுவர். இது பயனுள்ள மற்றும் சிலநேரங்களில் விலைமதிப்பற்ற இடைத்தரகர் சேவையாகக் காணப்படும்.

சுற்றுலாத்துறையிலுள்ள பயண முகவர்கள் போட்டித்தன்மையினை தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டிய தேவையிருப்பதுடன், இலத்திரனியல் சுற்றுலாவுடன் (e-tourism) இணைந்து பயணிகளின் மாற்றமடையும் விருப்பங்களிற்கு ஏற்ப புதிய சுற்றுலாத்தளங்களை உருவாக்குவதன் மூலம் பயண முகவர்கள் தங்களது சேவைகளை தரமுயர்த்திக் கொள்வதன் ஊடாக சுற்றுலாத்துறையின் அம்சமாகக் காணப்பட வேண்டும் (வண்டார மற்றும் சில்வா, 2016).

**உசாத்துணைகள்**


Bandara, R.I., and Silva, D.A.C., (2016). E-Tourism and roles of travel agencies: a case study of promoting Japanese inbound tourism in Sri Lanka, SEUSL Journal of Marketing, Vol. 1(1).

Chand, M., Travel Agency Management: An Introductory Text, Anmol Publication Pvt. Ltd., New Delhi.

Goldener, C., and Ritchie, B., (2006). Tourism Principles, Philosophy Practices, New York, John Wiley.

Gwenda, S, F., FInstCM, and Jane, A., (2003). Manual of Travel Agency Practice, Third edition, Elsevier Butterworth-Heinemann, Burlington, Britain.

Holloway, J.C., The Business of Tourism, Prentice Hall, London

Leonard, J. L., and Carson, L.J., (1997). An Introduction to Tourism. Reed Educational and Professional Publishing Ltd, Britain.

Negi, J., (2004). International Tourism and Travel: concepts and principles. Chand publication, New Delhi.

# பணவீக்கம்: ஓர் அறிமுகம்

கணேசன் சுகன்யா[4]

## அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பணவீக்கம் தொடர்பான விடயங்களை கண்டறிவது இன்றியமையாததாகும். பொருளாதாரத்தில் பணவீக்கம் என்பது சந்தையிலுள்ள பொருட்கள் சேவைகளின் பொதுவான விலை உயர்வால் அந்நாட்டின் நாணயத்தின் பொருட்களை வாங்கும் திறன் அல்லது சந்தை மதிப்பு குறைந்து போவதனைக் குறிக்கும். பணவீக்கத்திற்கான காரணங்கள், பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகள், பணவீக்கத்தின் வகைகள், பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பணவீக்கம்

ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி விலை மட்டமான பொது விலைமட்டமானது நீண்ட காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல் பணவீக்கம் எனப்படும். பணவீக்கம் என்பது விலைமட்டம் அதிகரிப்பதுடன் பணத்தின் பெறுமதி குறைவடைகின்ற நிலையாகும் (Crowther). பணவீக்கத்தினை அளவீடு செய்யும் செயன்முறையானது தனிநபரது பொருட்கள், சேவைகளின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஒருங்கிணைத்து பொது விலை மாற்றத்தினை அளவிடுவதற்கான ஒரு அளவீடாகும். ஒரு பொருளாதாரத்தின் அனைத்து பொருட்கள் சேவைகளினது விலை மாற்றங்களை அளவிடுவதென்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும் எனவே காலங்காலமாக சனத்தொகையின் நுகர்வு பழக்கவழக்கங்களை பின் தொடர்ந்து ஆய்விற்கான மாதிரி தெரிவு செய்யப்படுகின்றது. இப்பணவீக்கமானது தெரிவு செய்யப்பட்ட

---

[4] உதவி விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

விலைச் சுட்டெண்களின் துணையுடன் அளவிடப்படுகின்றது. இலங்கையில் பொது விலைமட்டத்தின் நடத்தையினைக் கண்காணிக்க பல்வேறு விலைச்சுட்டெண்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றன. அவைகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் போன்றவையாகும். எனினும் தற்பொழுது அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாக புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் காணப்படுகின்றது.

**பணச்சுருக்கம்**

ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் சராசரி விலை மட்டமானது நீண்ட காலத்தில் தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்லுதல் பணச்சுருக்கம் எனப்படும்.

**பணவீக்கமின்மை**

பணவீக்கமின்மை அல்லது பணவீக்கமற்ற நிலை என்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒருநாட்டின் பணவீக்க வீதமனது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வதனைக் குறிக்கும். பணவீக்க மானது பொது விலை மட்டத்தல் ஏற்படும் ஓர் தொடர்ச்சியான அதிகரிப்பினை கருதும் அதேவேளை பணவீக்க மின்மை என்பது அப்பணவீக்கவீதம் மந்தகதி அடைவதனைக் குறிக்கும்.

அதாவது பணவீக்கமின்மை நிலவும் காலப்பகுதியில் பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும். ஆனால், முன்னர் அதிகரித்த வேகத்தைவிட குறைந்த வேகத்திலேயே அதிகரிக்கும். பணவீக்கமின்மை என்பது பணச்சுருக்கத்தைக் குறிக்காது.

பணச்சுருக்கம் என்பது பொதுவிலைை மட்டம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதைக் குறிக்கும். ஆனால், பணவீக்கமின்மை என்பது பணவீக்கவீதம் வீழ்ச்சியடைந்து செல்வதைக் குறிக்கும். பணவீக்கமின்மை என்பது நேர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் எனவும் கூறப்படும். பணவீக்கமின்மை சிலவேளைகளில் பணச்சுருக்கத்திற்கு இட்டுச் செல்லக்கூடும்.

**பணவீக்கத்திற்கான காரணங்கள்**

- பொருட்கள் சேவைகளின் மொத்தக் கேள்வி அதிகரித்தல்
- பொருட்கள் சேவைகளின் மொத்த நிரம்பல் குறைவடைதல்
- நாட்டின் பணநிரம்பல் அதிகரித்தல்/ நிதி விரிவாக்கல் நடவடிக்கைகள் அதிகரித்தல்.
- பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் செலவு அதிகரித்தல்.
- பொருட்கள் சேவைகளின் இறக்குமதி விலைகள் அதிகரித்தல்.

**பணவீக்கத்தின் பாதகமான பொருளாதார விளைவுகள்/ பணவீக்கத்தின் பொருளியல் செலவுகள்**

- பணத்தின் மெய்ப்பெறுமதி/ கொள்வனவுசக்தி வீழ்ச்சியடையும்.
- நிலையான வருமானம் பெறும் மக்களின் மெய்வருமானம் வீழ்ச்சியடையும்.
- பணவீக்க வேகத்தைவிட குறைந்த வேகத்தில் வருமான அதிகரிப்பைப் பெறுபவர்களின் மெய்வருமானம் வீழ்ச்சியடையும்.
- வருமானப் பங்கீடு நியாமற்ற விதத்தில் இடம்பெறும்.
- முழுவறுமை நிலை அதிகரிக்கும்.
- பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதனால் சேமிப்பின் அளவு குறைவடையும், மெய்வட்டி வீதம் குறைவடையும்.
- பொருட்கள் சேவைகளுக்கான உற்பத்தி செலவுகள் அதிகரிக்கும்.
- ஏற்றுமதிகள் குறைவடைந்து இறக்குமதிகள் அதிகரிக்கும். இதனால், சென்மதி நிலுவை பற்றாக்குறை அதிகரிக்கும், நாணயமாற்று வீதம் மிகைமதிப்பீடு செய்யப்படும்/ நாணயமாற்று வீத பெறுமதி வீழ்ச்சியடையும்.நிச்சயமற்ற தன்மை காரணமாக நீண்ட கால முதலீடுகள் மேற்கொளவதில் முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டுவர்.

- பணவீக்க வேகம் அதிகமானல் பணத்தின் மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைந்து நாட்டின் நாணயமுறைமை பாதிக்கப்படும்.

- அபிவிருத்தி திட்டங்களுக்கான அரசின் செலவுகள் அதிகரித்து பாதீட்டு பற்றாக்குறை அதிகரிக்கும்.
- தொழில் சங்க நடவடிக்கைகள் அடிக்கடி இடம்பெறுவதால் நிலையற்ற பொருளாதார சூழல் ஏற்படும்.
- கடன் கொடுத்தோர் பாதிப்படைவர்

**பணவீக்கத்தின் வகைகள்**

பணவீக்கத்திற்கு அடிப்படையான கேள்விப்பக்க காரணிகள், நிரம்பல் பக்க காரணிகள் என்பவற்றின் அடிப்படையில் பணவீக்கமானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

**கேள்வித் தூண்டல் பணவீக்கம்**

ஒரு பொருளாதாரத்தில் நிறைதொழில் மட்டம் நிலவும் போது பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரிப்பதனால் மிகைக் கேள்வி ஏற்பட்டு நாட்டின் பொதுவிலைமட்டம் அதிகரித்துச் செல்வதனை கேள்வித் தூண்டல் பணவீக்கம் குறிக்கும்.

அதாவது பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டத்தில் மாற்றம் ஏற்படாத போது பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரிப்பு காரணமாக பொருட்பற்றாக்குறை ஏற்பட்டு விலைமட்டம் அதிகரிப்பதனை இது குறிக்கும்.

**கேள்வித் தூண்டல் பணவீக்கத்திற்கான கேள்விப்பக்க காரணிகள்**

- நாட்டின் பணநிரம்பல் அதிகரித்தல்.
- அரச செலவுகள் அதிகரித்தல், இதனால் மக்களிடமுள்ள பணத்தின் அளவு அதிகரித்தல்/ வருமானம் அதிகரித்தல்.
- தனியார் முதலீடுகள் அதிகரித்தல்.
- தனியார் நுகர்வுச் செலவுகள் அதிகரித்தல்.

**செலவுத் தூண்டல் பணவீக்கம்/ நிரம்பல் பணவீக்கம்**

ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளுக்கான உற்பத்திச் செலவு அதிகரிக்கும் போது மொத்த நிரம்பல் குறைவடைந்து நாட்டின் பொதுவிலைமட்டம் அதிகரித்துச் செல்வதனை செலவுத் தூண்டல் பணவீக்கம் குறிக்கும்.

**செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்கான காரணிகள்/ நிரம்பல் பக்க காரணிகள்**

- உற்பத்திக் காரணிகளின் விலைகள் அதிகரித்தல் (உதாரணம்: கூலி அதிகரித்தல்)
- மூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்கள் போன்ற காரணியல்லா உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தல்.
- அரசாங்கம், வரிகள், தீர்வைகள் ஆகியவற்றை உயர்த்துதல்.
- இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல்.
- வட்டி வீதங்கள் அதிகரித்து உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல்
- நாணயமாற்று வீதம் தேய்வடைதல்

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்**

ஒரு நாட்டின் பொதுவிலைமட்ட அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவும் பணவீக்கக் கட்டுப்பாடு எனப்படும். பணவீக்கக் கட்டுப்பாடானது பின்வரும் இரு வகையான கட்டுப்பாடுகளை உள்ளடக்கும்.

1. பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்.
2. பொருட்கள் சேவைகளுக்கான உற்பத்திச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி நிரம்பல் குறைவதனைக் கட்டுப்படுத்துதல்.

**மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்.**

பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப்

பின்வரும் கொள்கைகளையும், கருவிகளையும் பயன்படுத்த முடியும்.

1. நாணயக் கொள்கை/ பணக்கொள்கை.
2. வரவு செலவுத்திட்டக் கொள்கை/ பாதீட்டுக் கொள்கை/ இறைக் கொள்கை

**நாணயக் கொள்கை**

ஒரு நாட்டில் பொருளாதார உறுதி, நிதியியல் முறைமையில் உறுதி என்பவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் நாட்டின் பணநிரம்பல், கடன்நிரம்பல், வட்டி வீதம்இ மற்றும் கடன்பெறும் வசதி ஆகியவற்றை பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்தல் நாணயக் கொள்கை எனப்படும்.

பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பணநிரம்பலைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கையின் பின்வரும் கருவிகளைப் பயன்படுத்த முடியும்.

1. வங்கிவீதத்தை/ வட்டி வீதத்தை அதிகரித்தல்.வட்டிவீதத்தை அதிகரிப்பதன் மூலம் வணிக வங்கிகளின் கடன்களுக்கான கேள்வியைக் குறைப்பதன் மூலம் வணிக வங்கிகளின் கடனாக்கத்தைக் குறைத்து பணநிரம்பல் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.
2. காசு ஒதுக்கு வீதத்தை/ நியதிக்காசு வீதத்தை அதிகரித்தல்காசு ஒதுக்கு வீதத்தை அதிகரிப்பதன் மூலம் வணிக வங்கிகளின் காசிருப்பைக் குறைத்து அவற்றின் திரவத்தன்மையைக் குறைத்தல். இதன் மூலம் கடனக்கத்தைக் கட்டுப்படுத்தி, பணநிரம்பலைக் கட்டுப்படுத்தி, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.
3. பகிரங்க சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்தல். மத்திய வங்கி பகிரங்க சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்வதன் மூலம் வணிக வங்கிகளின் திரவத்தன்மையைக் குறைத்தல் இதன் மூலம் கடனாக்கத்தைக் கட்டுப்படுத்தி, பணநிரம்பலைக் கட்டுப்படுத்தி, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

4. ஏனைய மரபு ரீதியற்ற கருவிகளைப் பயன்படுத்துதல்.
   - நுகர்வுக்கான கடன்களைக் கட்டுப்படுத்துதல்.
   - கடன் முதிர்ச்சிக்கால எல்லையைக் குறைத்தல்.
   - கடன்களுக்கான பிணைகள் தொடர்பான கட்டுப்பாடுகளை இறுக்குதல்.
   - சில துறைகளுக்கான கடன் உச்ச அளவைக் குறைத்தல்.

**வரவு செலவுத் திட்டக் கொள்கை**

ஒரு நாட்டில் பொருளாதார உறுதி, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் அரச பாதீட்டில் அரச வருமானம் (வரி) அரச செலவு, பொதுப்படுகடன் (நிதியீட்டம்) ஆகியவற்றைப் பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்துதல் வரவு செலவுத்தட்டக் கொள்கை எனப்படும்.

பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு இறைக்கொள்கையின் கருவிகளைப் பின்வருமாறு பயன்படுத்தலாம்.

- வரி

நேர்வரிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் வருமானத்தைக் குறைத்து கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்.

- அரச செலவு

அரச செலவுகளைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தின் மொத்தச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி பணநிரம்பல் அதிகரிப்பை கட்டுப்படுத்துதல்.

- பற்றாக்குறையும் நிதியீட்டமும்

பாதீட்டுப் பற்றாக்குறையின் அளவினைக் குறைப்பதன் மூலமும், வங்கித்துறைக் கடன்களைப் குறைப்பதன் மூலமும் நிதி விரிவடைதலைக் குறைத்துப் பணநிரம்பல் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்.

**சுருக்கம்**

பணவீக்கமானது பொது விலைமட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு என்று வரைவிலக்கணக்கப்படுத்தப்படுகின்றது. கேள்விப்பக்க அல்லது நிரம்பல் பக்க காரணிகளால் பணவீக்கமானது ஆரம்பிக்கப்படலாம் பணவீக்கமானது தனிநபரில்இ நிறுவனத்தில்இ பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் விலை அதிகரிப்பினால் தனி நபர்கள் தமது பண வருமானம் குறைவானவற்றையே கொள்வனவு செய்யும் என உணர்கின்றனர். எனவே அவர்களது வாழ்க்கைத்தரம் குறைவடைகின்றது.

**உசாத்துணைகள்**

*Parameshwaran, V.,2008. Economics, KSK Publocation, Colombo*

*https://www.economicshelp.org/blog/315/inflation/inflation-advantages-and-disadvantages/*

*https://www.economicshelp.org/blog/2656/inflation/different-types-of-inflation/*

# நிறைபோட்டி மற்றும் தனியுரிமைச் சந்தைகளின் அறிமுகம்

வடிவேல் சிந்துஜா[5]

## அறிமுகம்

பொருளியலானது வரையறையற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்றகாக சுழலில் காணப்படும் அருமைத்தன்மை வாய்ந்த வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்கின்ற இயலாக அமையப்பெறுகின்றது. இவ் அருமைத்தன்மை வாய்ந்த வளங்களைக் கொண்டு பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவ் உற்பத்திகள் பல்வேறு விதமான சந்தை நிலைமைகளின் கீழ் அளிப்புச் செய்யப்படுவதன் வாயிலாக வரையறையற்ற மனித விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு பரிமாற்றம் நிகழ்வதன் வாயிலாக சந்தை அமைப்புக்கள் தோற்றம் பெறுகின்றன. பொருளியலில் இச் சந்தை அமைப்புக்கள் அவற்றின் தன்மை மற்றும் விசேட இயல்பின் காரணமாப் பிரதானமாக நான்கு வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன நிறைபோட்டி, தனியுரிமை, தனியுரிமைப் போட்டி, மற்றும் சிலருரிமையாகும். இவை சந்தைக் கட்டமைப்பில் காணப்படுகின்ற மிகப்பிரதானமான சந்தையமைப்புகளாகும்.

இக்கட்டுரையானது அவற்றுள் முதன்மை வாய்ந்த நிறைபோட்டி மற்றும் தனியுரிமை ஆகிய இரு சந்தையமைப்புகளின் அறிமுகம், அவற்றின் விசேட தன்மை, நடைமுறைப் போக்கு, மற்றும் இரு எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் பற்றி எடுத்துரைப்பதாக அமையப் பெறுகின்றது.

## உள்ளடக்க விடயம்

நிறைபோட்டி மற்றும் தனியுரிமை எனும் பதங்கள் வெளிப்படுத்தும் கருத்தாக அமையப் பெறுவது, ‘நிறைபோட்டி’ என்றால் பூரணத்துவம் வாய்ந்த போட்டியுடையது என்றும் ‘தனியுரிமை’ என்றால் தனி ஒருவருக்கு உரிமை காணப்படுவதுமான அமைப்பு என்றும் பொருள்படும். உண்மையான உலகிலே இவற்றைப்

[5] உதவி விரிவுரையாளர், பொருளியல்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

பிரித்தறிவது கடினமான ஒன்றாக அமையப்பெற்றாலும், பொருளியல் வல்லுனர்கள் சில கோட்பாடுகளுக்கமைவாக அவற்றினை இனங்கண்டு கொள்வதற்கு வழிவகுத்துள்ளனர். அதாவது சில ஒருமித்த பண்புகளைக் கொண்டு அவற்றினை ஒரு கட்டமைப்பின் கீழ் நிலைப்படுத்துகின்றனர். அவையாவன நுகர்வாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை, உற்பத்தியின் தன்மை, சந்தையில் பிரவேசிப்பதற்கும் சந்தையை விட்டு நீங்குவதற்கும் காணப்படும் சுதந்திரம், சந்தைத் தகவல், நிலவும் போட்டித் தன்மை மற்றும் சந்தையில் செல்வாக்குச் செலுத்தும் தன்மை என்பவற்றிக்கமைவாக நடைமுறை உலகில் இச் சந்தை அமைப்புகளை இனங்கண்டு கொள்ள முடியும்.

**நிறைபோட்டிச் சந்தை**

நிறைபோட்டிச் சந்தையானது பூரணத்தும் வாய்ந்த போட்டியினைக் கொண்டுள்ள சந்தை அமைப்பாகும். இங்கு எண்ணிறைந்த கொள்வனவாளரும் விற்பனையாளர்களும் காணப்படுவதுடன், ஓரினத் தன்மை வாயந்த பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்கு வளங்கள் வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் இது ஒரு வினைத்திறன் வாய்ந்த சந்தை அமைப்பாகக் காண்படுகின்றது.

நடைமுறை உலகிலே இச் சந்தையமைப்பின் அனைத்துப் பண்புகள் மற்றம் தன்மைகளைக் கொண்டமைந்துள்ள சந்தையினை இனங் காண்பது கடினமானதாகும். ஆகையால் இதனை ஒரு கற்பனைச் சந்தை என்று பொருளியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும் கிட்டிய பண்புகளைக் கொண்டமைந்துள்ள நெல், சோளம், கரட், முட்டை, தேசிக்காய், அரிசி, வெற்றிலை மற்றும் மீன் போன்ற சந்தை அமைப்புகளை நிறைபோட்டியாகக் கருதலாம்.

இவ் நிறைபோட்டிச் சந்தையமைப்பானது தன்னகத்தே சில பண்புகளையும் எடுகோள்களையும் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

- ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள், சேவைகள் காணப்படும்.
- எண்ணிறைந்த கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் காணப்படுவார்.

- பூரண பிரவேச சுதந்திரம் காணப்படும்.
- கொள்வனவளர்களும் விற்பனையாளர்களும் சந்தை பற்றிய பூரண அறிவைக் கொண்டிருப்பார்கள் அதாவது எவ்வித கிரயமுமின்றித் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- நிறுவனமானது விலையை ஏற்போனாகத் தொழிற்படும்.
- வளங்களின் அல்லது காரணிகளின் பூரண அசைவு காணப்படும்.
- நிறைபோட்டி நிறுவனமானது குறுங்காலத்தில் சதாரண இலாபம், அசாதாரண இலாபம், மற்றும் நட்டம் ஆகியவற்றை உழைத்துக் கொள்வதுடன், நீண்காலத்தில் சாதாரண இலாபத்தினை மாத்திரம் உழைத்துக் கொள்ளும்.
- நிறைபோட்டி சந்தையில் காணப்படும் ஒவ்வொரு நிறுவனமும் தாமாகவே தமது வெளியீட்டு மட்டத்தை நிர்ணயிக்க முடியும்.
- நிறுவனத்தின் எல்லை வருமானமும், சராசரி வருமானமும் சமனாகக் காணப்படும் (MR = AR).
- நிறைபோட்டிச் சந்தையானது சாதாரண சரிவுடைய கேள்விக் கோட்டினையுடையதாகக் காணப்படும்.

நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் விலையேற்போனாகத் தொழிற்படுகிறது. விலையேற்கும் நிறுவனத்தின் கேள்விக் கோடானது தரப்பட் சந்தை விலையில் கிடையச்சுக்குச் சமாந்தரமான ஒரு நேர்கோடாகக் காணப்படுவதுடன் (பூரண நெகிழ்வுள்ளதகாக் காணப்படும்), நிலவும் சந்தை விலையில் நிறுவனம் விரும்பிய எந்த தொகையையும் விற்பனை செய்யும். கைத்தொழிலின் கேள்வி வளையியானது கீழ் நோக்கிச் சரிவுடையதாகக் காணப்படும்.

தனியொரு நிறுவனம் விலையினை அதிகரிக்க முடியாது. ஏனெனில் பொருள் பூரண பதிலீடாக இருப்பதுடன் கொள்வனவாளர்கள் சந்தை பற்றிய பூரண அறிவுடையோராகவும், எண்ணற்ற நிரம்பலாளன் காணப்படுவதுமாகும். எனவே விலையை அதிகரித்தால் விற்பனைத் தொகை பூச்சியமாகும் என்பதனால் விலையை அதிகரிக்க முடியாது. நிலவும் விலையில் உற்பத்தி செய்யும் தொகையினை விற்பனை செய்ய முடியும்.

ஒரு நிறைபோட்டி நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும் அல்லது நட்டத்தை இழிவுபடுத்தும் தொகையினை நிரம்பல் செய்யும் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படுத்துவதன் மூலம் ஆகும். இந் நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் வளையியானது அதன் சராசரி மாறும் செலவின் இழிவுப் புள்ளிக்கு மேற்புறமுள்ள எல்லைச் செலவு வளையிக்குச் சமமாகும்.நிறைபோட்டி நிறுவனமானது வியாபார இணைப்பு, வியாபரக் கொள்வனவு, தனியார் மயமாக்கல், மற்றும் ஈர்ப்பு என்பவற்றின் காரணமாக தனியுரிமையாக மாற்றம் பெறலாம்.

**தனியுரிமைச் சந்தை**

தனியுரிமைச் சந்தையானது கைத்தொழிலில் தனியொரு நிறுவனத்தினை மாத்திரம் கொண்டமைந்த சந்தையமைப்பாகும். அதாவது கைத்தொழிலும் நிறுவனமும் ஒன்றாகக் காணப்படுகின்ற சந்தை அமைப்பாகும். இங்கு சந்தையில் ஒரே ஒரு நிறுவனமானது அனைத்துக் கைத்தொழிலுக்கும் தேவையான ஒரு உற்பத்தினை அளிப்புச் செய்வதாக் காணப்படும். இதற்கு போட்டித்தன்மையானது காணப்படமாட்டாது, ஏனெனில் இயற்கையான மற்றும் செயற்கையான சில தடைகள் காணப்படுவதன் வாயிலாக குறித்த கைத்தொழில் ஏனைய நிறுவனங்கள் பிரவேசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. நடைமுறை உலகில் இதற்குச் சிறந்த உதாரணங்களை எம்மால் அவதானிக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. அதாவது இயற்கைத் தடைகளை எடுத்து நோக்குமிடத்து இயற்கை வளங்களின் கிடைப்பனவு இன்றியமையாத அம்சமாகக் காணப்படுகின்றது. உலகிலே ஏனைய நாடுகளிடம் காணப்படாத சில வளங்கள் ஒரு சில நாடுகளில் மாத்திரம் காணப்படுதல். இதன் வாயிலாக அவை இயற்கையாவே தனியுரிமையினைப் பெற்றுக்கொள்கின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக அரபிய நாடுகளினைக் குறிப்பிடலாம். இங்கு கனிய நெய்யானது இயற்கையின் வரப்பிரசாதமாகக் கிடைக்கப் பெறுவதனால் ஏனைய நாடுகள் இவற்றில் தங்கியுள்ள நிலை காணப்படுகின்றது. இதனால் குறித்த உற்பத்தியில் இவ் அரபிய நாடுகள் தனியுரிமையினைப் பெற்றுள்ளன.

செயற்கையான தடைகளை நோக்குமிடத்து அளவுத்திட்டச் சிக்கனம், உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை, பாரிய மூதலீடு, அரச கட்டுப்பாடுகள் மற்றும் தொழிநுட்பம் போன்ற அகப் புறக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதற்குச் சிறந்த உதாரணத்தினை எமது நாட்டில் எம்மால் காணக் கூடிய நிலைமையுள்ளது. குறிப்பிட்ட சில சேவைத்துறைகள் தற்காலத்திலும் அரசினால் மாத்திரமே செயற்படுத்தப்பட்டு வரும் நிலை காணப்படுகின்றது. அதாவது புகையிரதப் போக்குவரத்து மற்றும் மின்சார சேவை போன்றவை தற்காலத்திலும் அரசினால் மாத்திரமே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஒரு கலப்புப் பொருளாதார நாடாகக் காணப்படினும் அரசின் பங்களிப்பு மாத்திரம் காணப்படுவதற்கான காரணமாக அமையப்பெறுவது, பாரிய முதலீடு, தொழிநுட்பம், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் பற்றாக்குறையாகும். இதனால் தனியார் துறை முதலீட்டாளர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் பங்கேற்பதில்லை. எனவே இவ்வாறான செயற்கைத் தடைகளினால் குறித்தொரு உற்பத்தி நிறுவனம் தனியுரிமையினைப் பெற்றுக் கொள்கின்றது.

இங்கு ஒரே ஒரு நிறுவனம் மாத்திரம் காணப்படுவதனால் உற்பத்தியாளன் சந்தையில் பூரண செல்வாக்கினை கொண்டிருப்பான் இதனால் நுகர்வோன் சந்தையில் செல்வாக்குச் செலுத்த முடியாதா தன்மை காணப்படுவதனால் நுகர்வோன் இறைமையானது பாதிக்கப்படுவதுடன், நிறுவனமானது நிரம்பலிலும் விலையிலும் ஆதிக்கம் செலுத்துவோனாகக் காணப்படும். எனும் ஒரே நேரத்தில் இரண்டிலும் செல்வாக்குச் செலுத்த முடியாது. சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமான ஒன்றாக அமையப்பெறும்.

இத் தனியுரிமையானது சில பண்புகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

- ஒரேயொரு நிரம்பலாளர் அல்லது நிறுவனம் மாத்திரம் காணப்படும்.
- சிறப்புத் தன்மை வாய்ந்த பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்யப்படும்.
- நிறைவற்ற சந்தைத் தகவல்களைக் கொண்டவையாகக் காணப்படும்.

- நிறுவனம் விலையை அமைப்போனாகத் தொழிற்படும்.
- பூரண பிரவேசத் தடை மிக அதிகமாகக் காணப்படும்.
- நிறுவனம் கீழ் நோக்கி சரிந்த செல்லும் கேள்வி வளையியை எதிர்நோக்குவதுடன் நிறுவனத்தினதும் சந்தையினதும் கேள்விக் கோடு ஒன்றாகக் காணப்படும்.
- விலைபேதப்படுத்தலைக் கொண்டிருக்கும்.
- நிறுவனத்தின் எல்லை வருமானம், சராசரி வருமானத்தை விட குறைவாக காணப்படும். இதனால் எல்லை வருமானக் கோடு, சராசரி வருமானக் கோட்டுக் கீழாகக் காணப்படும்.
- தனியுரிமை நிறுவனம் நீண்டகாலத்திலும், குறுங்காலத்திலும் அசாதாரண இலாபத்தினை உழைத்துக் கொள்ளும்.
- போட்டி விளம்பரம் காணப்படமாட்டாது, ஆனால் பொருளின் அறிமுக விளம்பரம் மாத்திரமே காணப்படும்.

கைத்தொழிலுக்கும், நிறுவனத்திற்கும் இடையில் இச்சந்தையில் வேறுபாடு காணப்படாது. கைத்தொழிலும் நிறுவனமும் ஒரே அலகாகும். சந்தையில் ஒரு நிறுவனம் மட்டும் காணப்படுவதனால் போட்டி காணப்படமாட்டாது. இதனால் தனியுரிமைப் பலத்தைப் பேணக்கூடிய தன்மை காணப்படும். இங்கு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு கிட்டிய பதிலீடுகள் இல்லை. இங்கு தனித்தன்மையான அல்லது விசேட தன்மையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் குறித்த உற்பத்தியை ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும்.

குறித்த தொழிலில் உள்ள உற்பத்தி நிறுவனமொன்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான நிறுவனங்கள் நிரம்பல் செய்யும் விலையை விடக் குறைவான விலையில் முழுச் சந்தைக்கும் தேவையான நிரம்பலை மேற்க்கொள்ள முடியுமாயின், இந்நிறுவனம் இயற்கைத் தனியுரிமையாக மாறும்.

**நிறைபோட்டி மற்றும் தனியுரிமைச் சந்தை அமைப்புக்களிற்கிடையிலான வேறுபாடுகள்**

நிறைபோட்டி மற்றும் தனியுரிமை சந்தை அமைப்புகளானது இரு வேறுபட்ட எண்ணக்கருக்களாகும். இவற்றின் பண்புகள், தன்மைகளுக்கமைய இவை இரண்டும் வேறுபட்டுக்

காணப்படுகின்றது. அது தொடர்பான கருத்துக்களினை கீழ்வரும் பகுதிகளில் நோக்கும்.

சந்தையில் காணப்படும் உற்பத்தியாளர்களினையும் கொள்வானவாளர்களையும் நோக்குமிடத்து நிறைபோட்டியில் எண்ணிறைநத்த தரப்பினர்கள் காணப்பவர், ஆனால் தனியுரிமையில் ஒரே ஒரு உற்பத்தியாளர் காணப்படுவதுடன் அதிகளவான கொண்வனவாளர்கள் காணப்படுவர்கள்.

நிறைபோட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுவதுடன், சந்தை தொடர்பான பூரண தகவலினையும் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை காணப்படும். தனியுரிமையில் விசேட பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் சந்தை தொடர்பான தகவலினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படும். இதனால் நிறைபோட்டில் நுகர்வோன் இறைமை காணப்படுவதுடன் தனியுரிமையில் நுகர்வோன் இறைமை பாதிக்கப்படுகின்றது.

சந்தையில் நுழைவதற்கும் சந்தையை விட்டு வெளியேறுவதற்கும் பூரண பிரவேச சுதந்திரமானது நிறைபோட்டில் காணப்பட்டாலும் தனியுரிமையில் அது முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இங்கு இயற்கையான மற்றும் செயற்கையான தடைகள் காண்படுகின்றது.

நிறைபோட்டி நிறுவனமானது சந்தையில் மிகச் சிறிய அலகாகக் காணப்படுவதனால் சந்தையில் செல்வாக்குச் செலுத்தும்தன்மை குறைவாகக் இருப்பதனால் விலையை ஏற்போனாகத் தொழிற்படுகின்றது. அது விலையில் எது வித மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியாது. விலையை அதிகரித்தாலோ குறைநத்தாலோ நட்டநிலைமையினை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் தனியுரிமையானது விலையினை அமைப்போனாகத் தொழிற்படுவதுடன் நிரம்பலிலும் செல்வாக்குச் செலுத்தும் நிலை காணப்படுகின்றது.

பூரண பிரவேச சுதந்திரம் காரணமாக நிறைபோட்டியானது குறுங்காலத்தில் அசாதாரண இலாபம், சதாரண இலாபம், மற்றும் நட்டம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதுடன் நீண்ட காலத்தில் அசாதாரண இலாபத்தினை மாத்திரமே உழைத்துக் கொள்ளமுடியும். ஆனால் தனியுரிமையில் பூரண பிரவேசத்

தடையினால் குறுங்காலத்திலும் நீண்டகாலத்திலும் அசாதாரண இலாபத்தினை உழைத்துக் கொள்ளக் கூடிய தன்மை காணப்படுகின்றது.

**அட்டவணை: ஒரே பார்வையில் நிறைபோட்டி மற்றும் தனியுரிமையின் பண்புகள்**

| **இயல்புகள்** | **நிறைபோட்டி.ச் சந்தை** | **தனியுரிமைச் சந்தை** |
|---|---|---|
| உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | மிக அதிகம் | ஒன்று மாத்திரம் |
| உற்பத்தி | பூரண பதிலீட்டுத் தன்மை வாய்ந்தவை | நெருங்கிய பதிலீடுகள் அற்றது |
| பிரவேச சுதந்திரம் | காணப்படும் | முற்றாகக் காணப்படமாட்டாது |
| நிறுவன அளவு | சந்தையுடன் ஒப்பிடும் போது மிகச் சிறியது | கைத்தொழிலும் நிறுவனமும் ஒன்றாகக் காணப்படும் |
| போட்டியின் தன்மை | விலை மற்றும் ஏனைய போட்டிகள் காணப்படாது | விலை மற்றும் ஏனைய போட்டிகள் காணப்படமாட்டாது |
| சந்தை தொடர்பான அறிவு | பூரண அறிவு காணப்படும் | முற்றாக வரையறுக்கப்பட்டது |
| நிறுவனத்தின் தன்மை | விலையை ஏற்போனாகத் தொழிற்படல் | விலையினை அமைத்தல் |
| நிறுவனத்தின் கேள்விக் கோடு | முடிவிலி நெகிழ்சியைக் கொண்டது | சதாரண கேள்விக் கோடு |

### சுருக்கம்

நிறைபோட்டி மற்றும் தனியுரிமை ஆகிய இரண்டும் சந்தைக் கட்டமைப்பினுள் காணப்படுகின்ற பிரதான சந்தையமைப்புக்களாகும். இவை தன்னகத்தே பல்வேறுபட்ட சிறப்பியல்புகளைக் கொண்டமைந்துள்ளதுடன், ஒன்றில் ஒன்று வேறுபட்டதாகவும் அமையப் பெறுகின்றது. நடைமுறை உலகில் இவற்றுக்கான கிட்டிய உதாரணங்களைக் காணக்கக் கூடியதாகவும், இவற்றின் பண்புகளுக்கமைய எம்மால் இவற்றினை பிரித்தறியக் கூடிய தன்மையும் காணப்படுகின்றது. தனியுரிமையுடன் ஒப்பிடும் போது நிறைபோட்டில் அதிகளவான வினைத்திறன் காணப்படுகின்றது. போட்டித் தன்மை இல்லாத நிலையில் செயற்திறன், வினைத்திறன் என்பன குறைந்தளவாகக் காணப்படும். இயற்கை, செயற்கைத் தடைகளின் வாயிலாக தனியுரிமை தோற்றம் பெற்றாலும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தனியுரிமையானது சிறந்த அம்சமாக அமையப்பெறாது எனலாம்.

### உசாத்துணைகள்

Ahuja, H.L. “Principles of Microeconomics”, (2011),chand and company ltd.

Dwivedi, D.N. “Micro Economics: Theory and Applications”, (2003). Pearson Education pte.Ltd

https://www.academia.edu/8383377/market_structures_wendy_spady_ECO204_principles_of_Microeconomics

https://opentextbc.ca/principlesofeconomics

https://www.govdoc.lk/grade-12-school-syllabus-and-teachers-guide-tamil-medium

# இலங்கையில் பணவீக்கமும் அதனுடைய தற்காலப் போக்கும்

ச.சியாளினி[6] & த. பவன்[7]

## அறிமுகம்

பேரினப் பொருளாதார இலக்குகளில் ஒன்றான பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை எய்துவதற்கு விலைமட்ட உறுதிப்பாடு என்பது இன்றியமையாத ஒன்றாகும். இங்கு விலை உறுதிப்பாடானது பொதுவிலைமட்டமானது பாரியளவால் தளம்பலடையாமல் உறுதியாகப் பேணுவதனூடாக பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துகின்ற செயன்முறையைக் குறித்து நிற்கின்றது. உலகநாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் தமது நாணயக் கொள்கையை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதனூடாக இவ்விலை உறுதிப்பாட்டை அடைந்துகொள்ள முயற்சிக்கின்றன. குறைந்த பணவீக்கத்துடனான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியானது பேரினப் பொருளாதாரக் குறிக்கோளில் முக்கியமான ஒன்றாக விளங்குவதனால் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களில் ஒன்றாக விலை உறுதிப்பாடு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விலை உறுதிப்பாடு பொருளாதாரமொன்றில் வைப்பாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சாதகமானதொரு சூழலை உருவாக்கி வினைத்திறன்மிக்க நிதியியல் இடைநிலைத் தன்மையையும் சந்தைகளின் காத்திரமான தொழிற்பாட்டையும் ஊக்குவிப்பதுடன் முதலீட்டையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்துகின்றது.

பொதுவிலை மட்டப் போக்கில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பணவீக்கம் என வரையறுக்கப்படுகிறது. அதாவது உள்நாட்டு நாணயத்தின் கொள்வனவுசக்தியில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான வீழ்ச்சியை இது குறித்துநிற்கிறது. பொதுவாக

---

[6] உதவி விரிவுரையாளர், பொருளியல் கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

[7] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பணவீக்கமானது நாடொன்றிலுள்ள பொதுவிலைமட்டத்தைப் பிரதிபலிக்கும் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. பணவீக்கத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் போன்ற பல்வேறு துறைகள் மீதும் செல்வாக்குச் செலுத்துவதுடன் ஒட்டுமொத்தமான பொருளாதார முறைமையையும் செயற்றிறனற்ற தன்மைக்கு இட்டுச்செல்கின்றது. மேலும் பொருளாதாரமொன்றில் முதலீடு மற்றும் சேமிப்பு என்பவற்றை ஊக்கமிழக்கச் செய்வதுடன் வேலையின்மையையும் வறுமையையும் அதிகரித்து இறுதியாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் மட்டுப்படுத்துவதோடு பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டையும் பாதிக்கிறது. இதன் காரணமாகவே பல்வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதார நோக்கங்களை மக்கள் அடைந்துகொள்வதற்கு குறைந்தளவில் பணவீக்கத்தைப் பேணவேண்டியது அவசியமாகவுள்ளது.

இக்கட்டுரையானது, ஆரம்பத்தில் இலங்கையில் பணவீக்கமானது அளவிடப்படும் முறையினையும், இரண்டாவதாக இலங்கையில் பணவீக்கத்திற்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய முக்கியமான காரணிகளையும் இறுதியாக இலங்கையில் பணவீக்கத்தினுடைய நடைமுறைப் போக்கினையும் ஆராய்கிறது.

### இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் விலைச் சுட்டெண்கள் தொடர்பான பார்வை

குறிப்பிட்ட காலப்பகுதியில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு பணவீக்கம் அளவிடப்படுகின்றது. பணவீக்கத்தின் துல்லியமான அளவீடுகள் நாணயக் கொள்கையின் இறுதி இலக்கான விலை உறுதிப்பாட்டினை அடைந்துகொள்வதற்கு இன்றியமையாததாகும். அந்தவகையில் நாடொன்றின் பணவீக்க அழுத்தத்தை அளவிடுவதற்கும் நாணயக் கொள்கையின் பிரதான நோக்கமான விலை உறுதித் தன்மையினை அடைவதற்கான கொள்கை வகுத்தலை மேற்கொள்வதற்கும் நம்பகத்தன்மை வாய்ந்ததும் உரியகாலத்தில் கிடைக்கத்தக்கதாகவும் உள்ள பணவீக்க அளவீடுகள் தேவைப்படுகின்றது. போதுவாக நுகர்வோர் விலைச்சுட்டெண்களைப் பயன்படுத்துவதனூடாகப் பணவீக்கமானது கணிப்பிடப்படுகின்றது. மேலும் நாட்டின்

உண்மையான வாழ்க்கைச் செலவினைப் பிரதிபலிக்கும் வகையிலும் சமகால நுகர்வோர் வாழ்க்கைச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டும் புதிய நுகர்வோர் விலைச்சுட்டெண்களை புதியதொரு அடியாண்டைக் கருத்திற்கொண்டு கணிப்பிடவேண்டியுள்ளது. இந்நிலையில், கடந்த காலங்களில் இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடுவதற்காக இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

நுகர்வோர் விலைச் சுட்டெண்கள், சராசரியாக வீட்டுத்துறையினரால் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையின் ஒட்டுமொத்த விலைமட்டத்தின் போக்கினை அளவிடுகின்றன. மக்களின் நுகர்வுக் கோலங்கள் மற்றும் செலவின முறைகள் என்பன காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து செல்கின்ற காரணத்தால் நுகர்வோர் விலைச் சுட்டெண்களிலும் அடியாண்டை மாற்றியமைப்பதனூடாக மிகவும் துல்லியமான விலைச்சுட்டெண்களைக் கணிப்பீடு செய்துகொள்ள வேண்டியுள்ளது. இம்முறையானது சர்வதேசரீதியில் புள்ளிவிபரவியல் முகவர்களாலும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும்.

இலங்கையில் நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் தொடர்பான கணிப்பீடானது 1939ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. அக்காலத்தில் கொழும்பின் உழைக்கும் வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்கள் விலைகளின் போக்கினை ஆய்வுசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. கொழும்பில் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின் அடியாண்டுகாலம் நவம்பர் 1938 – ஏப்ரல் 1939 வரையாகும். இதனைத் தொடர்ந்து இலங்கையின் அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 1953ஆம் ஆண்டில் முதலாவது அலுவல்சார் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் வெளியிடப்பட்டது. முதலாவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெணின் அடியாண்டு

1952 ஆகும். இது 1949/1950 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு குடும்ப வரவுசெலவுத்திட்ட அளவீட்டு முடிவுகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறான நுகர்வு மற்றும் செலவினங்களின் போக்குகளின் அடிப்படையிலமைந்த பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையைக் கொண்டிருந்தது. அதன் பின்னர், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2002 மற்றும் 2006/ 2007 ஆகிய அடியாண்டுகளை அடிப்படையாகக் கொண்டு அக்காலப்பகுதிகளில் நடாத்தப்பட்ட வீட்டுத்துறையினரின் வருமான மற்றும் செலவினம் என்பனவற்றின் அளவீட்டு முடிவுகளின் அடிப்படையில் மீளமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அண்மைய அடியாண்டின் மீள்திருத்தமானது 2012/ 2013இல் இலங்கையில் நடாத்தப்பட்ட வீட்டுத்துறையினரின் வருமான மற்றும் செலவீன அளவீட்டின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது. தற்போது இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடியாண்டினை 2006/ 2007இலிருந்து 2013இற்கு புதுப்பித்துள்ளது. இந்தவகையில் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் காலத்தொடர் தரவுகள் 2017 ஜனவரியிலிருந்து வெளியிடப்பட்டன.

ஒவ்வொரு அடியாண்டின் மீளமைப்புடன் முக்கியமான சில முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காலத்திற்கு ஏற்றவகையிலான இசசுட்டெண்களில் முக்கிய மாற்றமானது பண்டக் கூடையின் உணவு மற்றும் உணவல்லா வகை செலவினத்துடன் தொடர்புடைய பங்குகளிலான மாற்றங்களையும் எடுத்துக்காட்டியிருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100) உணவு வகையின் செலவினப் பங்கு 28.2 வீதமாகும். இது 2006/ 2007ஆம் ஆண்டை அடியாண்டாகக்கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2006/ 2007= 100) 41.0 சதவீதம் மற்றும் 1952ஆம் ஆண்டை அடியாண்டாகக்கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (1952=100) 61.9 சதவீதம் என்பனவற்றுடன் ஒப்பிடுகின்ற போது குறிப்பிட்டதொரு வீழ்ச்சியாகும். இது தற்போது கொழும்பு நகர்ப்புறக் குடியிருப்புக்கள் ஒப்பீட்டு ரீதியில் கணிசமான செலவினத்தை உணவல்லா வகைக்கு

மேற்கொள்வதற்கு முனைவதையும் காலத்திற்கேற்ற வகையில் இது குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது என்பதனையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இருப்பினும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினைப் பொறுத்தவரை முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சராசரி வீட்டுத்துறையினர் மொத்த செலவினத்தில் 44.0 சதவீதத்தை உணவிற்காக செலவழிக்கின்றனர். 2015இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தேசிய மட்டத்தில் நுகர்வு மற்றும் செவின மட்டங்களின் போக்குகளைப் பிரதிபலித்த அதேவேளை கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், கொழும்பு மாவட்டத்திலுள்ள நுகர்வோரின் நுகர்வு மற்றும் செலவினங்களின் போக்குகளை வெளிப்படுத்தியுள்ளது. தேசிய நுகர்வோன் விலைச் சுட்டெண்ணிற்கு ஏற்ற வகையில் கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணின் அடியாண்டானது 2013இற்கு மாற்றியமைக்கப்பட்டமையானது தற்போது தேசிய மற்றும் நகர்ப்புற விலைகளின் போக்குகளை இலகுவாக ஒப்பீடுசெய்வதற்கு இயலச்செய்துள்ளது.

**இலங்கையில் பண வீக்கத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய பிரதான காரணிகள்**

எந்தவொரு பொருளாதாரத்திலும் பணவீக்க உயர்வுக்கான பிதான காரணியாக பணநிரம்பல் அடையாளங் காணப்பட்டுள்ளது. பணநிரம்பல் என்படுவது குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பொதுமக்கள் வசமுள்ள பணஇருப்புக்களின் பெறுமதியாகும். பண்டங்கள் மற்றும் சேவைகளின் நிரம்பலானது அவற்றுக்கான கேள்வியின் அதே வீதத்துடன் அதிகரிக்காவிட்டால் பணநிரம்பலின் விரிவாக்கத்துடன் மொத்தக் கேள்வி மட்டம் அதிகரிக்கும் போது அது பணவீக்கத்திற்கு இட்டுச்செல்கின்றது. இர்வின் பிஷர் அவர்களினால் 1911ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட “பணத்தின கொள்வனவு சக்தி” என்ற கட்டுரையின்படி பணத்தின் சுற்றோட்ட வேகம், கொடுக்கல்வாங்கல்களின் அளவு போன்ற காரணிகள் நிலையாக இருக்கின்ற நிலையில் பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பானது பணவீக்கத்துடன் நேர்க்கணியத்தெடாடப்பினைக்

கொண்டிருக்கும் எனவும் இந்நிலையில் பணத்தின் நிரம்பலுக்கும் பணத்தின் பெறுமதிக்குமிடையே எதிர்க்கணியத் தொடர்பு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். அதாவது பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பணவீக்கத்தில் வரிவுத் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் பணத்தின் உள்நாட்டுப் பெறுமதியையும் வீழ்ச்சியடையச் செய்யும் என்கிறார்.

பணவீக்கத்தைத் தூண்டுகின்ற மற்றுமொரு பிரதான காரணியாக அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை காணப்படுகின்றது. அரசாங்கம் தனது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்காக மத்திய வங்கி, மற்றும் வர்த்தக வங்கிகள் போன்றவற்றிடமிருந்து கடன் வசதியை பெற்றுக்கொள்கின்ற போது நாட்டில் பணநிரம்பல் அதிகரித்து பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லக்கூடும். நாடொன்றின் பணவீக்கத்திற்கான மற்றுமொரு காரணியாக உள்ளநாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தினைக் குறிப்பிடலாம். திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இலங்கை ரூபாவானது தொடர்ச்சியாக ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக தேய்வடைந்து கொண்டு செல்வதனைக் காணலாம். இது இலங்கை ரூபாவின் வெளிநாடடுப் பெறுமதியை வீழ்ச்சியடையச் செய்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு மற்றும் பெற்றோலியம் பொன்ற பொருட்களின் விலையிலொரு அகிகரிப்பினை ஏற்படுத்தலாம். எனவே நாணயமாற்று வீத பெறுமதித் தேய்வானது இலங்கையில் உயர்ந்தளவான பணவீக்கத்தோடு உறுதியான தொடர்பினைக் கொண்டிருக்கிறது எனலாம்.

பணவீக்கத்திற்கான இன்னொரு பிரதான காரணியாக சர்வதேச ரீதியாக ஏற்படும் பணவீக்கத்தினைக் குறிப்பிடலாம். கட்டுப்பாடற்ற முறையில் வெளிநாட்டு வர்த்தகத்தினை அனுமதிப்பதனால் இறக்குமதிகளின் மூலமாக உள்நாட்டுத் தேவையை ஈடுசெய்கின்ற இலங்கைப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் சர்வதேச ரீதியாக ஏற்படும் பணவீக்கம் இறக்குமதிகளின் வாயிலாக உள்நாட்டிலும் பணவீக்கத்தினை ஏற்படுத்தலாம். இலங்கையைப்

பொறுத்தவரையில் வெளிநாட்டு அதிர்ச்சிகளும் உள்நாட்டுப் பொருளாதாரத்தினைப் பாதிக்கும் காரணிகளாக விளங்குகின்றன. இங்கு வெளிநாட்டுஅதிர்ச்சி என்கின்ற போது குறிப்பாக சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை மற்றும் உணவுப் பொருட்களின் விலை என்பவற்றில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறித்து நிற்கின்றது. மேலும், கடந்த மூன்று தசாப்த காலமாக உள்நாட்டில் இடம்பெற்று வந்த அமைதியற்ற சூழ்நிலை, அரசியல் உறுதியற்றதன்மை மற்றும் பின்பற்றப்பட்டுவந்த கொள்கை மாற்றங்கள் என்பனவும் இலங்கையின் பணவீக்கத்தின் மீது பங்களிப்பு செய்த காரணிகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன.

## இலங்கையில் பணவீக்கத்தின் போக்கு

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதி தொடக்கம் பொருளாதாரம் தாராளமயமாக்கப்படுவதற்கு முன்னரான காலப்பகுதி வரைக்கும் பணவீக்கத்தின் அளவானது பெரும்பாலும் குறைந்த மட்டத்திலேயே பதிவாகியுள்ளது. குறிப்பாக 1953 தொடக்கம் 1977 வரையான இரண்டரை தசாப்த காலப்பகுதியில் இலங்கையின் வருடாந்த சராசரி பணவீக்கம் 2.9 சதவீதமாகவே காணப்பட்டது. 1974ஆம் ஆண்டில் இலங்கை முதன்முறையாக இரட்டை இலக்க பணவீக்கத்தினை அனுபவித்த அதேவேளை ஏனைய ஆண்டுகளில் குறைந்தளவான பணவீக்கத்தை பதிவுசெய்திருந்தது. இவ்வுயர் பணவீக்கத்திற்கு 1973-1974 காலப்பகுதியில் இலங்கை மற்றும் இலங்கைக்கு உணவுப்பொருட்களை வழங்கும் நாடுகள் என்பவற்றில் ஏற்பட்ட பாரியளவான வரட்சியின் காரணமாக உணவுப்பொருள்களினுடைய உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே பிரதான காரணியாகும். மேலும், இலங்கை பெற்றோலிய தேவைகளுக்காக அதிகளவு வெளிநாடுகளில் தங்கியிருந்த நிலையில் 1973ஆம் ஆண்டு ஏற்பட்ட உலக பெற்றோலிய நெருக்கடியின் விளைவாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்ட அதேவேளை வெளிநாட்டிலிருந்தான இறக்குமதிப் பொருள்களின் விலையும் அதிகரித்து காணப்பட்டன. இவை யாவும் இணைந்த வகையிலே 1974ஆம் ஆண்டு இலங்கை

12.3 சதவீதம் என்ற இரட்டை இலக்க பணவீக்கத்தினை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும் பணவீக்கமானது இலங்கைப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதிகளிலேயே தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது.

1977ஆம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்தான காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் விரிவாக்கமடைந்தமையினால் பணத்திற்கான கேள்வி பெருமளவு அதிகரித்தது. மேலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினால் நுகர்வுப்பொருட்கள் மீதான கேள்வியும் அதிகரித்தது. இந்நடவடிக்கையின் விளைவாகப் பணவீக்கம் இலங்கையில் முதற் தடவையாக 1980இல் 26.1 சதவீதம் என்ற உயர்ந்த நிலையினைப் பதிவுசெய்தது. இவ்வுயர் பணவீக்கத்திற்கு வெளிநாட்டு அதிர்ச்சிகளே பிரதான காரணமாக அமைந்திருந்தன. உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பானது உள்நாட்டில் அதிகரித்த இறக்குமதிச் செலவிற்கு வழிவகுத்ததோடு உயர்ந்தளவான பணவீக்கத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்தியது. மேலும் 1980களின் ஆரம்பப்பகுதியில் அரசாங்கம் பல பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்ய முன்வந்தது. இதன்படி துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் அவற்றுள் முன்னணித் திட்டமாக கருதப்பட்டது. இதனுடன் இணைந்த வகையில் அதிகரித்த அரசசெலவின் விளைவாக 1980களில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.1 சதவீதமாகக் காணப்பட்டதுடன் பணவீக்கத்தின் மீது அதிகரித்த அழுத்தத்திற்கு இட்டுச்சென்றிந்தது. இவற்றிற்கு மேலாக 1987ஆம் அண்டிற்குப் பின்னரான காலப்பகுதியில் பாதுகாப்பிற்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டியிருந்ததினால் அடுத்து வந்த ஆறு ஆண்டுகளில் பணவீக்க நிலமை இரட்டை இலக்கத்தில் காணப்பட்டது.

1994இல் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது சமாதானச்சூழல் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்பட்ட அதேவேளை பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்திருந்தன. இதனால் 1994 மற்றும் 1995களில் பணவீக்கமானது முறையே 8.4 மற்றும் 7.7 சதவீதமாகக் குறைவடைந்தது. எனினும் 1996இல் இலங்கையில் யுத்த நிலமையானது உச்சத்திற்குச் சென்றிருந்தமையினால் பாதுகாப்புச் செலவினங்கள் உயர்த்தப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மீது அதிகளவான வரியும் விதிக்கப்பட்டன. இவை பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரித்திருந்த அதேவேளை 1996ஆம் ஆண்டில் உயர்வடைந்த பணவீக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தது. 1997ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக 2000ஆம் ஆண்டுவரை இலங்கையின் பணவீக்கமானது வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கினையே காட்டியது. 1990களில் 21.5 சதவீதமாகக காணப்பட்ட பணவீக்கமானது 2000ஆம் ஆண்டளவில் 6.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு நுகர்வுப் பொருட்களினதும் இறக்குமதிப் நுகர்வுப் பொருட்களினதும் நிரம்பல் அதிகரித்துக் காணப்பட்டமை, தெரிவுசெய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்குத் தற்காலிகத் தீர்வை விலக்குகள் வழங்கப்பட்டமை, பணநிரம்பல் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி, மத்தியவங்கி மற்றும் அரசாங்கம் என்பவற்றின் இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கை முகாமைத்துவம் என்பன இணைந்தவகையில் இப் பணவீக்க வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. எனினும், 2001ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் அதிகம் பாதிப்பிற்குள்ளாகியது. வரட்சியின் காரணமாக உள்நாட்டில் உணவுப் பொருட்களின் விளைச்சலானது வீழ்ச்சியடைந்தது. இது ஆண்டின் இறுதியில் நெல்லின் விலையை 13 சதவீத அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. இவற்றோடு இறக்குமதிகளின் மீதான 40 சதவீத மேலதிக இறக்குமதித் தீர்வை விதிப்பு மற்றும் நாணயப் பெறுமதித் தேய்வு போன்றன மீண்டும் பணவீக்கத்தினை உயர்ந்த நிலைக்கு இட்டுச்சென்றன.

இலங்கை அனுபவங்களின்படி 2003ஆம் ஆண்டினைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பணவீக்கமானது தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. 2003 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் சராசரியாக 13 சதவீத பணவீக்கம் பதிவாகியுள்ளது. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விருத்தியடைந்த கேள்வி, நிரம்பல் பக்கக் காரணிகள், சர்வதேச சந்தையில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட விரைவான தளம்பல்கள், அரசதுறை ஊழியர்களுக்கான கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படிகளில் செய்யப்பட்ட சீராக்கங்கள் என்பன அதிகரித்த கேள்வியினூடாக விலைகளின் மீது அழுத்தங்களைத் தோற்றுவித்தன.

தாராளமயமாக்கலைத் தொடர்நத்தான காலப்பகுதியில் இலங்கையின் சராசரிப் பணவீக்கம் 11 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை பொருளாதார வளர்ச்சி சராசரியாக 5 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்விரு பேரினப் பொருளாதார மாறிகளையும் அவதானிக்கின்ற போது பணவீக்கமானது இரட்டை இலக்கத்தில் காணப்பட்டாலும் பொருளாதார வளர்ச்சியானது குறிப்பிடத்தக்களவே பதிவாகியுள்ளதனால் பணவீக்கமானது பொருளாதாரத்தின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதேகாலப்பகுதியில் ஏனைய தென்னாசிய நாடுகளான குறிப்பாக, இந்தியா மற்றும் பூட்டான் போன்ற நாடுகளின் அனுபவத்தினை அவதானிக்கின்ற போது அவை இலங்கைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. இந்நாடுகளில் குறைந்தளவு பணவீக்கம் காணப்பட்ட அதேவைளை அவை உயர்ந்தளவான பொருளாதார வளர்ச்சியையும் பதிவுசெய்தன.

இலங்கையில் குறிப்பாக திறந்த பொருளாதாரத்தின் பின்னர் பணவீக்கமானது இரட்டை இலக்கம் கொண்டதாகவே காணப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக 1980இல் அவதானிக்கப்பட்ட பணவீக்கம்தான் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த பணவீக்கமாகும் (ஆண்டுச் சராசரி 26.1 சதவீதம்). இதற்கு அடுத்தபடியாக 1990இல் ஆண்டுச் சராசரிப் பணவீக்கமானது 21.5 சதவீதமாகவும் 2008இல் 22.6 சதவீதமாகவும் காணப்பட்டது.

எனினும் 2009 இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் பணவீக்கத்தின் போக்கானது குறைவடைந்து செல்வதனை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக பணவீக்க வீதமானது தனி ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்பட்டு வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக 2014ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளில் 5 சதவீதத்திலும் பார்க்கக் குறைவாகவே பணவீக்கமானது காணப்பட்டது. இருப்பினும் 2017 இலங்கையின் பணவீக்கமானது நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு சற்று மேல் அதிகரித்து 7.7 சதவீதமாக பதிவுசெய்தாலும் 2018இல் அது 2.1 ஆக வீழ்ச்சி கண்டது.

ஆய்வுரீதியான சான்றுகளின்படி இலங்கையில் பணவீக்கத்தை ஏற்படுத்திய முக்கிய காரணிகளாக பணநிரம்பல் அதிகரிப்பு, நாணயமாற்றுவீத பெறுமதித் தேய்வு, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம், வட்டிவீதம், மெய்க்கூலி, நாணயப் பெறுமதித் தேய்வு, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு, இலங்கையில் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் பின்பற்றுப்பட்டுவந்த கொள்கை மாற்றங்கள் உள்நாட்டில் நிலவிய யுத்தம் மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகள் குறிப்பாக பெற்றோலிய விலை அதிகரிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

வரைபடம் 1: இலங்கையில் பணவீக்கத்தின் போக்கு




**முடிவுரை**

இலங்கையில் அதிகரித்துச் செல்லுகின்ற பணவீக்கமானது பொருளாதார சமூக மற்றும் அரசியல் தாக்கங்களைக் கொண்டுள்ள அதேவேளை பொருளாதாரமொன்றில் விலை உறுதிப்பாட்டினையும் தளம்பலடையச்செய்கிறது. குறுங்காலத்தில் பிரதானமாக நிரம்பல் பக்கக் காரணிகளே பணவீக்கத்திற்கு ஏதுவாக அமைகின்றமையினால் கொள்கை நடவடிக்கைகள் உற்பத்தியினை விரிவாக்குவதிலும் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதிலும் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்:**

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, வருடாந்த அறிக்கைகள், பல்வெறுபட்ட நிதியாண்டுகளுக்குரியது.

வைப்பகம் இதழ்- 7, இலங்கை மத்திய வங்கி தொடர்பூட்டல் திணைக்கள வெளியீடு, இலங்கை மத்திய வங்கி, பக்க இல: 1- 10.

## வணிகத்தின் தற்காலப் போக்கு

ச. டிலோஜன்[8]

லூகாபசியொலியின் தேடல் விகுதிக்கும் சார்லஸ்பபேச்சின் சிந்தனைக்கும் இன்று உலகு மூழ்கியே உள்ளது என்றால் அது மிகையாகாது. மனிதன் ஒலியும் இயந்திர மொழியும் பூச்சியம் மற்றது ஒன்று இவை இரண்டினைக் கொண்டு பேசத் தொடங்கியது அது உலக மொழியின் உச்ச நிலையானது. வணிகம் கருவில் பிறக்கும் குழந்தைக்கும் மண்ணில் மக்கிய உடல் வரை தன் பரந்த பார்வையை ஒவ்வொருவரின் தேவை வடிவிலும் தான் தன்னிறைவு கொண்டிருக்கிறது.

பண்டமாற்று முறையில் ஆரம்பித்து இன்று அலை வரிசைகளில் எங்கள் ஆசைகள் நிறைவேறுகின்றதென்பதே நிஜம். சிப்பிகளிலும் கற்துண்டுகளையும் கொண்டு ஆரம்பித்த இப் பயணம் பணம் என்ற அளவீட்டில் நிலைத்து நின்று இன்று காகிதங்களைப் போல் அட்டைகளில் பேசி தற்போது இலக்கத்தில் தன்னைப் புதைத்துக் கொண்டது.

ஆசைகொண்ட ஒவ்வொருவரையும் ஒரு பிணைப்பாய் இணைத்துள்ளது இந்த வணிகம். ஒற்றை விரல் நுனியில் உலகம் தன் விற்பனை முகத்தை எம் கண்களுக்கு விருந்தாக்கி விடுகிறது. இந்த வணிகம் அலைவரிகளால் மனிதனின் எண்ணவோட்டமும் ஒரே நேர்கோட்டிலேயே பயணிக்க முயல்கிறது. கனவு காணுதல் என்ற செயற்பாடு கணணியில் காணு என்கின்ற வார்த்தையாய் மடைமாற்றம் பெற்றுள்ளது. இலங்கையில் வசிக்கும் என்னால் இக்கனப்பொழுதே அமேரிக்கரின் உணவு முறையினைக் காணவும் முடியும், சுவைத்து உணரவும் முடியும். எம் இன்றைய தலைமுறைக்கு அனைத்துமே மிக எளிது என்பது நிதர்சனமான உண்மை. மனித மூளை செய்த விகுதி தவறு இன்று ஏதும் தந்திடமுடியுமோ. பசிக்கு உணவென்றான் வணிகம் தன்னை மருந்திற்கு விற்பனை செய்யத் தயாராகி விட்டது

[8] உதவி விரிவுரையாளர், வர்த்தகத் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

நோய்க்கு மருந்தென்றான் இப்போது மருந்தே நோய் என்கிறான். பெண்களின் மாதவிலக்கு தவணையிலும் கதவைத்தட்டும் வணிகம் வெண்மை என்பதை எம்மனதில் தூய்மை என்பதாய் நம்பவைத்துள்ளான். கலாச்சாரம் பேணிப்பாதுகாத்தவை அனைத்தும் இன்று சந்தை வெளியில் விற்பனைக்கு தயார் என்பதே இன்றைய நிலை. பணம் எம் தேவையை எடை போட வந்த காகிதம். தற்போது எம்மையே விலைபோகும் அளவிற்கு நிற்ப்பந்தித்துள்ளது.

எண்களின் சூட்சுமத்தில் பணம் தன்நடமாட்டத்தை குறைத்துக் கொண்டது. வேகம் தான் மனிதனின் அனைத்து ஆசையையும் நிறைவேற்ற போதுமான ஆயுதம் என்பதை அறிந்த வணிகாய்வாளர்கள் இன்று வேகபரிமாற்றம் என்பதில் மிகவும் துடிப்புடனே இவ்வளர்ச்சியில் பங்குபற்றுகிறார்கள். மனித எண்ண ஆசைகளிலிருந்து வணிகம் வளர்ந்த எண்ணக்கரு விலக்கப்பட்டு தற்போது வணிக எண்ண ஓட்டத்தை மனிதன் விரும்பத் தொடங்கிவிட்டான். வீட்டில் இருந்தவாறே இன்று என்ன புதிதாக வந்துள்ளது அதன் வடிவம், அதன் செயல்திறன், அதன் விலை, அதன் ஆயுள் அனைத்தையும் ஒற்றை விரல் தட்டும் செயலில் இரு கண்களையும் வியப்பில் காணவைக்கும் அளவிற்கு இலத்திரனியல் வணிக வலையமைப்பு, ஊர் சந்தை, நகரபுற சந்தை அதையும் தாண்டி உலக சந்தை என்ற அளவு எம்பார்வையை விசாலப்படுத்தியுள்ளது.

எமக்கு என்ன வேண்டும் என்ற கேள்வியை உள்வாங்கி தன் வளர்ச்சிப்பாதையில் உச்சம் என்கின்ற சொல்லைக்கூட அதற்கு அடுத்து என்னவோ! என்ற வியப்புக்குறியாய் மாற்றியிருக்கிறது.

அலைவரிகளோடு மனிதன் பேசத் தொடங்கினான் இன்று அந்த அலையமைப்பு இன்றியமையாத வலையமைப்பாய் மாறிப்போனது.

நீரில் மாசு எனும் எண்ணக்கரு தோற்றுவிக்கப்பட்டு நீர் விற்பனை செய்யப்படவும் தொடங்கிவிட்டது. காற்று மாசு எனும் எண்ணக்கரு விதைக்கப்பட்டு விட்டது. இனி அவை விற்பனை ஆக ஆரம்பிக்கும் என்பதே சமூகநல ஆய்வாளர்களின் கருத்து. இவற்றை விளம்பரம் செய்யவும் இலகுவில் நம் அனைவரிடமும் கொண்டு சேர்க்கவும்

சமூகவலைத்தளங்களின் பங்கு மிக ஆற்றல் வாய்ந்ததாகவே உள்ளது.

சினிமா கதாப்பாத்திரங்களில் வரும் மிகச்சிறந்த மக்களை கவர்ந்த நடிகர் நடிகை மூலம் நீ இதனை தெரிவு செய் என்ற உள் திணிப்பு முறை மிக எளிதாகவே இறுதி நுகர்வோரை சென்றடைகின்றது. இதில் குறிப்பாக ஆடை அலங்காரம், மோட்டார் வாகனம், குடிக்கும் பானம் என்று இவர்களைக் கொண்டே விற்பனை செய்யப்படுகின்றது.

உலகில் மனிதன் சிந்தனையால் முடியாமை மட்டும் தன் செயலிழந்து போனது. இருந்தும் சில மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் கொசு போன்றவற்றை முற்றாக அகற்றும் வேலைகளில் இன்னுமே எம் வணிகம் தலையிட முடியாமல் இருப்பதன் காரணம் அதனை நம்பி இயங்கும் ஒரு சில வணிக நிறுவனங்களின் தூண்டலாகவும் இவை அமைந்திருக்கலாம், தேவையால் தோன்றிய வணிகம் இன்று தேவையை உருவாக்கி பின் விற்பனை செய்தல் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மிக சிறந்த செல்வந்த குடும்பங்களின் கையில் கிடக்கும் இவ்வணிகம் அவர்களின் அடக்கி ஆளும் திறனையும் இதனுடன் இணைத்துள்ளார்கள் என்பதே இதன் அடிப்படை. மனிதர்கள் அரசனுக்குப் பணிந்து அடிமைகளாக வாழ்ந்தார்கள் என்ற பார்வை மறைந்து வணிக சிறையில் நாம் என்கின்ற மீளமுடியா ஒரு பள்ளத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளோம். உணவு விற்பனை ஆனது பின் உறையுள் விற்பனைக்குப் போனது நீர் விற்பனையாகத் தொடங்கி விட்டது, காற்றும் வந்து விடும் என்கின்ற எதிர்வு கூறல் இவைகளைத் தாண்டி நோய் என்கின்ற உடல் சாகும் விசம் இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தது. வணிகம் தலைப்பிட்டது விற்கும் முகவர்கள் பணத்தின் அடிமைகள் ஆனார்கள்.

எலிக்கு விசம் வைத்துக் கொல்லும் ஒரு வகை எலியை முற்றாக அழித்தல் என்னும் செயல்முறையை கண்டிருப்போம். உணவு என்பது மட்டுமே எலியின் தேடல், தேவை. அவை இதனை உணர வாய்ப்பில்லை. இருந்தும் ஒவ்வொரு எலியும் இது பற்றிய

விழிப்புணர்வு வேண்டும் என்று எலியிடம் வாதிடுவதும் பலனில்லை.

எமது பார்வையில் எலியும் எவரோ சிலரின் பார்வையில் நாமும் எலிகளாகத்தான் பரீட்சிக்கப்படுகிறோமோ என்ற வணிகத்தின் மீது மனிதன் கொண்ட ஆசை விருப்பம் அச்சமாய் உருவெடுத்துள்ளது என்பதே எம் பலரின் பார்வை.

நடந்து சென்று முன் எம் தேவையானவற்றை விலைகொடுத்து பெற்றோம், பின் துவிச்சக்கர வண்டி, பின் மோட்டார் வாகனம் என்று தற்போது நாம் இருக்குறோம், அவர்களே அனைத்தையும் கொண்டு வந்து தருகிறார்கள். அவர்களால் நாம் மகிழ்ச்சிகளை விலைகொடுத்துப் பெற முடிந்தால் அது எம் வணிக வெற்றி எனலாம் இல்லை எங்களால் இன்னுமே மருந்துகளையும் நோயெதிர்ப்பு சாதனத்தையும் விலை கொடுத்து வாங்கத் தொடங்கிவிட்டோம் என்றால் நாம் சிறையில் இருந்த வண்ணம் கால்ப்பந்து விளையாடுகிறோம். அந்த மகிழ்ச்சி ஒரு எல்லைக்கு உட்பட்டதே என்பதே என்பார்வை. எப்போது நீ வன்முறையை கையாளுகிறாயோ அப்போதே நீ வணிகர்களின் கட்டுக்குள் வந்துவிட்டாய் அரசே உன்னை அடக்கும் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கும் நீ எதிர்த்து நிற்பாய் உன்னை இல்லாதொளிக்க அரசுக்கு இதுவே போதும் அடிமைப்படுத்தும் முறைக்கு இரண்டால் மட்டும் தீர்வு உண்டு ஒன்று அகிம்சை இன்னொன்று நகைச்சுவை என எழுத்தாளர் Jbon Jennon குறிப்பிட்டுள்ளார்.

இவைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் போர்கள் எனப்படுவது திட்டமிடப்பட்ட கொலைகள் என்று அக்காலகட்டத்தில் இரண்டாம் உலகயுத்தப் போரில் பங்குபற்றிய இராணுவ வீரர் Harry Patch குறிப்பிட்டிருப்பார். இவர்களின் கருத்துக்களின் பின்னனியில் ஆயுதம் ஓர் விற்பனை மிகை இலாபம் ஈட்டும் வியாபரம் எனத்தெளிவுபடும். கண்கள் குருடானவர்களை கையைப் பிடித்து அழைத்துச் செல்லல் சமூகநலன் என பொருள் பட்டாலும் கண்கள் இருந்தும் எம் கண்களைச் சுற்றிக்கட்டி யாரோ ஒருவரால் இழுத்து செல்லப்படுகிறோமா? என்ற இரு வேறுபட்ட கோணங்களில் நாம் தெளிவுபட வேண்டும். ஆயுத விற்பனை, புகைத்தல் விற்பனை, போதைப்பொருள் விற்பனை, இதனைப் பயன்படுத்துபவர்களைக் கைது செய்வதை விட அவற்றின் உற்பத்திகளை தடை

செய்தலே சிறந்ததாகும் எனப் பல சமூக ஆய்வாளர்களின் கருத்து காணப்படினும், இவற்றின் உற்பத்தி அதிகரித்துக் கொண்டே உள்ளது என்பதே இன்றைய தெளிவு நிலை. இதன் முழுநோக்கும் அடிமைத்தனமும் வணிக மிகை இலாபமுமே ஆகும்.

மருந்தின் தரம் உயர்ந்திருந்தால் மருத்துவமனைகளின் தொகை குறைவடைந்திருக்கும். இவைக்கு மாற்றாக நோய்களின் தொகைகளே கூடிக்கொண்டிருக்கின்றன. இவைக்கு எம் சமூகம் சான்று. நாங்கள் மக்களிடம் தடுப்பூசிகளை விளம்பரப்படுத்தினோம், அதை போட்டுக்கொள்ள மக்களைத் திணித்தோம், இது நோயைக் குணப்படுத்த அல்ல மாறாக எம் வியாபாரத்தை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கவே எம் வியாபாரத்தில் உச்சலாபம் கண்டோம் (Micheal Tostecholm).

வைத்தியார் Harris Coulter (1932 -2009) இனால் முன்வைக்கப்பட்ட “தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியான 1950 களின் பின்னர் இயற்கை மரணம் அல்லது யார் தலையீடும் அற்ற மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் தீடீர் இறப்பு வீதங்கள் அதிகரித்தது” எனும் கருத்தானது மிகவும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. Attorney American Environmetal எனும் சஞ்சிகையில் Kennedy எனும் ஆய்வாளர் இத்தடுப்பூசியின் பயன்பாடு பற்றி மிகச் சிறப்பான வரிகளைப் பதிவிட்டுள்ளார். இத்தடுப்பூசிகளின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு அல்லது விற்பனையினைத் தூண்டுவதற்கு வைத்தியர்கள் அதிகளவில் ஊக்குவிக்கப்பட்டனர். அதாவது தடுப்பூசிகளின் விற்பனையானது 63% இனைத் தாண்டினால் ஊக்கத்தொகை வழங்கப்படுவதாகவும், இதனை எதிர்ப்போருக்கு தண்டனை வழங்கப்படும் சூழ்நிலை காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வைத்தியர்கள் நோயாளர்களைத் தடுப்பூசிகளைப் பயன்படுத்துமாறு திணித்தனர். இங்கு வணிகம் மனிதனது தேவையை நிறைவு செய்யவில்லை, மாறாக மனிதனைக் கொண்டு தனது தேவையினை நிறைவு செய்யும் நிலையினை உருவாக்கியுள்ளது. ஆகவே நுகர்வாளர்களாகிய நாங்கள் சிந்தித்துச் செயலாற்றுவோம்.

வணிகம் மனித தேவையை தன் வளர்ச்சியால் அதிகரித்துள்ளது என்பதை விட வணிகத்தேவையால் மனிதன் வணிகத்தினுள் சிறைப்பட்டான் என்பதே எமது தற்போதைய நிலை.

மரக்குற்றியிலிருந்து கடவுளை செதுக்கி எடுத்த பின் மிஞ்சிய துண்டுகளை எடுத்து துப்பாக்கி தயாரித்தால் பார்வைகளில் வேறு என்ற நிலைகளைத் தந்தாலும் தேவை எம்முள் குற்றிகளாகவே இருந்தன. வணிகன் செதுக்கியதில் குறைபாடும் தோன்றும் என்பதே என் தலைப்பு.

**உசாத்துணைகள்**


Coulter, H.L. (1973). Divided Legacy a History of the Schism in Medical Thought.

Cronin, J., & Kennedy, R. (1999). The riverkeepers: Two activists fight to reclaim our environment as a basic human right. Simon and Schuster.

Patch, H., & Van Emden, R. (2010). The Last Fighting Tommy: The Life of Harry Patch, Last Veteran of the Trenches, 1989-2000. Bloomsbury Publishing USA.

## இணைப்பு 01: பொருளியலாளர்

### ஆடம் ஸ்மித் (1723-1790)



ஆடம் ஸ்மித் 18 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட ஒரு பிரபல்யம் வாய்ந்த ஸ்காட்டி' பொருளாதார நிபுணர், தத்துவஞானி, எழுத்தாளர், மற்றும் ஒரு தார்மீக தத்துவவாதி ஆவார். இவர் ''நவீன பொருளாதாரத்தின் தந்தை'' அல்லது ''முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை'' என அழைக்கப்படுகின்றார். புகழ்பெற்ற லாயிஸ்- ஃபைர் (Laisez – Faire) பொருளாதாரக் கொள்கையின் முக்கிய ஆதரவாளரான இவர் தனது முதல் புத்தகமான ''தார்மீக உணர்வுகளின் கோட்பாடு'' இல் போட்டி, வழங்கல் மற்றும் தேவை மற்றும் சுயநலன் ஆகியவற்றின் மூலம் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சுதந்திர சந்தைகளின் போக்கில் மறைகரம் பற்றிய கருத்தை முன்மொழிந்தார். அத்தோடு ஊதிய வேறுபாடுகளை ஈடுசெய்யும் கோட்டிபாட்டினையும் முன்வைத்துள்ளார். ஆனால் 1776 ஆம் ஆண்டு அவர் எழுதிய An Inquiry into the Nature and Causes of the Weakth of Nations என்ற புத்தகத்தின் வாயிலாக மிகவும் பிரபல்யம் பெற்றார். இவரது படைப்பானது பிற்காலத்தில் The Wealth of Nations (நாடுகளின் செல்வம்) என்றழைக்கப்பட்டது. இது அவரது மகத்தான பணியாகவும் பொருளாதாரத்தின் முதல் நவீன படைப்பாகவும் கருதப்படுகின்றது. இவரினால் பொருளியலானது 'செல்வம் பற்றிய இயல்' எனும் தத்துவக் கோட்பாடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு 02: எண்ணக்கரு விளக்கம்

- **பணவீக்கம்:** நீண்டகாலரீதியாக குறித்த ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு பணவீக்கம் எனப்படும்.

- **பணச்சுருக்கம்:** நீண்டகாலரீதியாக குறித்த ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான வீழ்ச்சி பணச்சுருக்கம் எனப்படும்.

- **பணவீக்கமின்மை:** குறித்த ஒரு நாட்டின் பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு சென்றாலும் அப்பொதுவிலை மட்டம் அதிகரிக்கின்ற வீதமானது படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டுசெல்லுமாயின் அது பணவீக்கமின்மை எனப்படும்.

- **பணம்:** பொருளாதாரமொன்றில் அனைத்துவிதமான கொடுக்கல்வாங்கலிற்கும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் சட்டரீதியானதுமான ஒரு பொதுவான கொடுக்கல்வாங்கல் சாதனம் பணம் எனப்படும்.

- **அண்மிய பணம்/ கிட்டிய பணம்:** குறைந்த காலதாமதத்துடனும் குறைந்த முதல் நட்டத்துடனும் கொடுக்கல் வாங்கலுக்கு பணமாக மாற்றிப் பயன்படுத்தப்படும் வருவாய் உழைத்துத் தரக்கூடிய குறுங்கால நிதிச் சொத்துக்களே கிட்டிய பணமாகும்.

- **முழுப் பெறுமதி பணம்:** ஒரு நாணயத்தை உருவாக்குவதற்கு ஏற்பட்ட செலவும் அதன் முகப்பில் குறிக்கப்பட்ட பெறுமதியும் ஒன்றுக்கொன்று சமனாகக் காணப்படின் அது முழுப் பெறுமதி பணம் எனப்படும்.

- **அடையாளப் பணம்:** ஒரு நாணத்தை உருவாக்குவதற்கு ஏற்பட்ட செலவை விட அதன் முகப்பில் குறிக்கப்பட்ட பெறுமதி உயர்வாகக் காணப்படின் அது அடையாளப் பணம் எனப்படும்.

- **பணநிரம்பல்:** ஒரு நாட்டில் அரசு, வங்கி அமைப்புக்கள் தவிர்ந்த நிறுவனங்களிடமும் அவர்கள் சார்ந்த பொது மக்களிடமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக தயாராக உள்ள மொத்த பணத்தின் அளவே பணநிரம்பலாகும்.

- **பணத்தின் கேள்வி:** குறிப்பிட்ட ஒரு நேரத்தில் பணத்தை பணமாக தம்மிடம் வைத்திருப்பதற்கு பொதுமக்களுக்குள்ள விருப்பம் பணக் கேள்வியாகும்.

- **பணத்தின் சுழற்சி வேகம்:** ஒரு குறிப்பிட்ட சராசரி நாணய அலகானது எத்தனை தடவைகள் இறுதிப் பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்களுக்காக பரிமாற்றப்படுகிறது என்பதை அளவிட்டுக் காட்டும் ஒரு எண்ணக்கருவே பணத்தின் சுழற்சி வேகம் ஆகும்.

- **கடனாக்கம்:** தொடர்ச்சியான வங்கியமைப்பினைக் கொண்ட பொருளாதாரமொன்றில் வணிக வங்கிகள், வாடிக்கையாளரின் வைப்பினை ஏற்றல் மற்றும் கடன் வழங்குதல் என்ற தமது தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலம் பொருளாதாரத்தில் இல்லாதளவு பணத்தினை உருவாக்கிக்கொள்ளும் செயற்பாடு கடனாக்கம் அல்லது வைப்பாக்கம் எனப்படும்.

- **நிதிச் சந்தை:** ஒரு பொருளாதாரத்தில் மிகை நிதியுள்ள மூலங்களிடமிருந்து பற்றாக்குறை நிதியுள்ள மூலங்களுக்கு நிதியினை மாற்றீடு செய்கின்ற ஒரு சந்தையே நிதிச் சந்தையாகும்.

- **சர்வதேச வர்த்தகம்:** ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட அரசியல் எல்லைக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கும் குறித்த நாட்டுக்கும் இடையில் இடம்பெறும் கட்புலன் மற்றும் கட்புலனாகா பண்டங்கள் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றின் சட்டரீதியான கொடுக்கல் வாங்கல்களே சர்வதேச வர்த்தகம் என அழைக்கப்படும்.

## இணைப்பு 03: புள்ளிவிபர இணைப்புக்கள்

### அட்டவணை 01

**தொழிற்பலமும், வேலைவாய்ப்பும் மற்றும் வேலையற்றோரும்**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| **தொழிற்பலம்** | | | |
| மொத்தம் | 8,310,682 | 8,566,686 | 8,387,759 |
| வேலை செய்வோர் | 7,947,683 | 8,208,179 | 8,015,166 |
| வேலையற்றோர் | 362,999 | 358,507 | 372,593 |
| **தொழிற்பல பங்களிப்பு வீதம் (%)** | | | |
| மொத்தம் | 53.8 | 54.1 | 51.8 |
| ஆண் | 75.1 | 74.5 | 73.0 |
| பெண் | 35.9 | 36.6 | 33.6 |
| **வேலையற்றோர் வீதம் (%)** | | | |
| மொத்தம் | 4.4 | 4.2 | 4.4 |
| ஆண் | 2.9 | 2.9 | 3.0 |
| பெண் | 7.0 | 6.5 | 7.1 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

### அட்டவணை 02

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளியேறல்கள்**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| மொத்தம் | 242,816 | 211,992 | 211,459 |
| **ஆண் பெண் பிரிவுப்படி** | | | |
| ஆண் | 160,306 | 139,268 | 129,774 |
| பெண் | 82,510 | 72,724 | 81,685 |
| **மனிதவலு மட்டத்தின் அடிப்படையில்** | | | |
| தொழில்வல்லுநர் மட்டம் | 6,578 | 6,379 | 7,210 |
| நடுத்தர மட்டம் | 8,234 | 7,127 | 7,748 |
| எழுதுவினைஞரும் அவை சார்ந்தவையும் | 10,862 | 9,271 | 10,021 |
| தேர்ச்சி பெற்ற | 76,545 | 68,980 | 67,053 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற | 3,926 | 3,297 | 2,770 |
| தேர்ச்சி அற்ற | 71,656 | 61,054 | 51,719 |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 65,015 | 55,884 | 64,938 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

அட்டவணை 03

**வருமானமும் செலவினமும்**

| | 2009/10 | 2012/13 | 2016 |
|---|---|---|---|
| குடித்தன மாத வருமான இடை (ரூபா) | 36,451 | 45,878 | 62,237 |
| குடித்தன மாத வருமான இடையம் (ரூபா) | 23,746 | 30,814 | 43,511 |
| குடித்தன மாத வருமான கினி இணைவுக் குணகம் | 0.49 | 0.48 | 0.45 |
| குடித்தன அளவு (எண்ணிக்கை) | 4.0 | 3.9 | 3.8 |
| குடித்தனத்தில் வருமானம் பெறுபவர்களின் எண்ணிக்கை | 1.8 | 1.8 | 1.8 |
| மாத வருமானத்தில் வருமானம் பெறுபவர்களின் இடை (ரூபா) | 20,427 | 25,963 | 33,894 |
| வருமானம் பெறுபவர்களின் மாத வருமான கினி குணகம் | 0.55 | 0.53 | 0.51 |
| குடித்தனத்தில் மாதாந்த பண வருமானம் (ரூபா) | 31,209 | 39,300 | 52,979 |
| குடித்தனத்தில் பணமற்ற மாதாந்த வருமானம் | 5,242 | 6,578 | 9,257 |
| மாதமொன்றுக்கான சராசரிக் குடித்தனச் செலவினம் (ரூபா) | 31,331 | 41,444 | 54,999 |
| உணவு மற்றும் பானத்திற்கான செலவு (ரூபா) | 13,267 | 15,651 | 19,114 |
| உணவல்லாத பொருட்களுக்கான செலவு (ரூபா) (குடிவகை, புகையிலை நீங்கலாக) | 17,399 | 25,088 | 35,885 |
| மதுபானம், புகையிலைக்கான செலவு (ரூபா) | 665 | 705 | 1,056 |
| உணவு விகிதாசாரம் (உணவிற்குச் செலவிடும் சதவீதம்) | 42.3 | 37.8 | 34.8 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

அட்டவணை 04

**கல்வி**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| **பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை** | 11,021 | 11,053 | 11,042 |
| அரச பாடசாலைகள் | 10,162 | 10,194 | 10,175 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் | 105 | 106 | 106 |
| பிரிவேனாக்கள் | 754 | 753 | 761 |
| **மாணவர்களின் மொத்த எண்ணிக்கை** | 4,345,740 | 4,367,493 | 4,416,054 |
| அரச பாடசாலைகள் | 4,143,330 | 4,165,964 | 4,214,772 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் | 136,407 | 138,657 | 140,842 |
| பிரிவேனாக்கள் | 66,003 | 62,872 | 60,440 |
| **ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை** | 245,930 | 253,044 | 261,350 |
| அரச பாடசாலைகள் | 232,555 | 241,591 | 247,334 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் | 6,872 | 7,039 | 7,227 |
| பிரிவேனாக்கள் | 6,503 | 6,414 | 6,789 |
| **அரச பாடசாலைகளுக்கான புதிய அனுமதி** | 317,895 | 322,137 | 328,632 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

அட்டவணை 05

**நிலப்பரப்பளவு, சனத்தொகை, வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| **சனத்தொகை** | | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட நட்டாண்டு சனத்தொகை | | | |
| இருபாலாரும் (‘000) | 21,203 | 21,444 | 21,670 |
| ஆண் (‘000) | 10,265 | 10,382 | 10,492 |
| பெண் (‘000) | 10,938 | 11,062 | 11,178 |
| சனத்தொகை அடர்த்தி (ஒரு ச.கி.மீ இற்கு) | 338 | 342 | 346 |

| | | | |
|---|---|---|---|
| சனத்தொகை வளர்ச்சி வீதம் (%) | 1.1 | 1.1 | 1.05 |
| தங்கியிருப்போர் வீதம் (%) | 49.4 | 49.4 | 49.4 |
| **வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்** | | | |
| **உயிர்ப் பிறப்புக்கள்** | | | |
| இருபாலரும் | 331,073 | 326,052 | 328,112 |
| ஆண் | 169,177 | 165,926 | 166,946 |
| பெண் | 161,896 | 160,126 | 161,166 |
| செப்பமற்ற பிறப்பு விகிதம் (1000 சனத்தொகைக்கு) | 15.6 | 15.2 | 15.1 |
| **இறப்புக்கள்** | | | |
| இருபாலரும் | 130,765 | 139,822 | 139,498 |
| ஆண் | 73,056 | 77,206 | 77,311 |
| பெண் | 57,709 | 62,616 | 62,187 |
| செப்பமற்ற இறப்பு விகிதம் (1000 சனத்தொகைக்கு) | 6.2 | 6.5 | 6.4 |
| திருமணம் | | | |
| மொத்தம் | 173,990 | 169,365 | 170,027 |
| பொது | 152,033 | 147,238 | 147,866 |
| கண்டிய | 491 | 386 | 330 |
| முஸ்லிம் | 21,466 | 21,741 | 21,831 |
| புலம்பெயர்வு | | | |
| வருகை | 3,652,077 | 3,729,860 | 4,038,386 |
| வெளியேறுதல் | 3,608,306 | 3,680,071 | 4,019,935 |
| நிகர புலம்பெயர்வு | 43,771 | 49,789 | 18,451 |
| பரப்பளவு | | | |
| மொத்தப் பரப்பளவு | ச.து.கி.மீ 65,610 | | |
| நிலப்பரப்பளவு | ச.து.கி.மீ 62,705 | | |
| உள்ளக நிலப்பரப்பு | ச.து.கி.மீ 2,905 | | |
| அதிகூடிய நீளம் | கி.மீ 435 | | |
| அதிகூடிய அகலம் | கி.மீ 225 | | |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

**அட்டவணை 06**

**விலைச் சுட்டெண்களும் விலைகளும்**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| **கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை: 2013=100)** | | | |
| சகல பொருட்களும் | 113.8 | 122.6 | 125.2 |
| உப சுட்டெண்கள் | | | |
| உணவும் மதுபானமல்லாத பானங்களும் | 114.1 | 127.0 | 126.8 |
| உணவல்லாதவை | 113.5 | 119.1 | 123.9 |
| மதுபானங்களும் புகையிலையும் | 158.5 | 175.6 | 183.4 |
| ஆடைகளும் காலணிகளும் | 114.5 | 118.2 | 122.8 |
| வீட்டு வசதி, நீர், மின், எரிவாயு ஏனைய எரிபொருள் | 114.8 | 115.8 | 117.3 |
| தளபாடம், குடித்தன உபகரணம், வீட்டுப் பராமரிப்பு | 113.1 | 119.0 | 124.0 |
| சுகாதாரம் | 128.0 | 140.7 | 151.3 |
| போக்குவரத்து | 97.6 | 103.3 | 112.0 |
| தொடர்பாடல் | 110.9 | 121.2 | 119.7 |
| கேளிக்கை மற்றும் கலாச்சாரம் | 109.4 | 111.3 | 115.7 |
| கல்வி | 115.0 | 119.8 | 127.0 |
| விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 106.7 | 110.7 | 114.6 |
| ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 114.8 | 127.4 | 133.8 |
| கொ.நு.வி.சு இற்கான மாற்று வீதம் (%) | 4.0 | 7.7 | 2.1 |
| **தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு உற்பத்திகளின் நாடளாவிய ரீதியிலான வருடாந்த சராசரி உற்பத்தியாளர் விலை (ஒரு கி.கி இற்கு ரூபா)** | | | |
| நெல் - சம்பா | 38.51 | 48.91 | 49.27 |
| அரசி - புழுங்கல் (சிவப்பு) | 67.71 | 81.67 | 80.57 |
| சிவப்புப்பச்சை | 58.81 | 76.9 | 70.80 |
| உருளைக்கிழங்கு | 89.48 | 96.61 | 86.91 |
| பெரிய வெங்காயம் | 73.67 | 78.10 | 73.98 |
| செத்தல் மிளகாய் | 218.67 | 220.00 | 209.06 |
| முட்டை (ஒன்றிற்கு ரூபா) | 14.84 | 12.98 | 14.36 |

| **தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் வருடாந்த சராசரி திறந்த சந்தை சில்லறை விலைகள்- கொழும்பு மாவட்டம் (ரூபா)** | | | |
|---|---|---|---|
| அரிசி – சம்பா (1 கி.கி) | 92.75 | 98.76 | 109.33 |
| சிவப்புப்பச்சை (1 கி.கி) | 69.52 | 87.94 | 83.18 |
| வெள்ளைப் பச்சை(1 கி.கி) | 72.12 | 83.64 | 83.35 |
| கோதுமை மா (1 கி.கி) | 89.66 | 89.33 | 91.59 |
| பருப்பு (சிவப்பு) (1 கி.கி) | 191.16 | 180.52 | 148.50 |
| பால் மா – அங்கர் (400கி) | 325.00 | 325.00 | 337.33 |
| மண்ணெண்ணெய் (1லீற்) | 49.00 | 44.42 | 62.34 |
| பெற்றோல் (1லீற்) | 117.00 | 117.00 | 135.03 |
| டீசல் (1லீற்) | 95.00 | 95.00 | 107.95 |
| எல்.பீ எரிவாயு (12.5 கி.கி) | 1344.21 | 1348.50 | 1576.25 |

***Source: Various Central Bank Report, Sri Lanka***

**அட்டவணை 07**

**சர்வதேச வர்த்தகம்**

| | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|
| **வர்த்தகம் (ரூபா மில்லியன்)** | | | |
| இறக்குமதிகளின் பெறுமதி | 2,841,383 | 3,251,281 | 3,587,048 |
| ஏற்றுமதிகளின் பெறுமதி | 1,536,167 | 1,789,882 | 1,974,260 |
| உள்நாட்டு ஏற்றுமதிகள் | 1,487,652 | 1,739,728 | 1,893,443 |
| மீள் ஏற்றுமதிகள் | 48,515 | 50,155 | 80,817 |
| வர்த்தக நிலுவை | -1,305,216 | -1,461,399 | -1,612,788 |
| **முக்கிய பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி (ரூபா மில்லியன்)** | | | |
| அரிசி | 1,872 | 45,881 | 16,679 |
| கோதுமை | 33,536 | 46,239 | 53,918 |
| சீனி | 49,919 | 39,041 | 40,045 |
| மசகு எண்ணெய் | 86,969 | 107,397 | 160,024 |
| உரம் | 19,904 | 15,703 | 42,682 |
| **முக்கிய பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூபா மில்லியன்)** | | | |
| தேயிலை | 184,778 | 233,338 | 231,750 |
| இறப்பர் | 4,758 | 5,920 | 5,088 |

| | | | |
|---|---|---|---|
| தேங்காய் | 31,477 | 28,921 | 24,263 |
| தைத்த ஆடைகள் | 669,796 | 722,624 | 807,787 |
| பெற்றோலியம் | 41,794 | 66,280 | 101,467 |
| இரத்தினக் கற்கள் | 20,750 | 21,143 | 21,703 |
| **பிரதான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட அளவு ('000 மெ.தொன்)** | | | |
| அரிசி | 30 | 748 | 249 |
| கோதுமை | 948 | 1,250 | 1,297 |
| சீனி | 651 | 498 | 645 |
| மசகு எண்ணெய் (பரல்கள்) | 13 | 12 | 13 |
| உரம் | 527 | 399 | 861 |
| **பிரதான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு ('000 மெ.தொன்)** | | | |
| தேயிலை | 289 | 289 | 282 |
| இறப்பர் | 16 | 17 | 14 |
| தேங்காய் | 765 | 466 | 355 |
| பெற்றோலியம் | 807 | 972 | 1,093 |
| இரத்தினக்கல் ('000 கரட்) | 12,136 | 9,400 | 8,190 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

**அட்டவணை 08**

**சுற்றுலாத்துறை**

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| உல்லாசப் பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 2,050,832 | 2,116,407 | 2,333,796 |
| சுற்றுலாப் பயணிகளின் இரவுகள் ('000) | 20,918 | 23,069 | 25,205 |
| சுற்றுலாப் பயணிகளின் பெறுகைகள் (ரூபா மில்லியன்) | 512,293 | 598,356 | 712,027 |
| சுற்றுலாப் பயணிகளின் பெறுகைகள் (அமெ.டொலர் மில்லியன்) | 3,518.5 | 3,924.9 | 4,380.6 |
| இரவுகளின் தங்கும் சராசரிக் காலம் | 10.2 | 10.9 | 10.8 |
| உல்லாசப் பயணிகளின் நாளாந்தப் பெறுகைகள் (அமெ.டொலர் மில்லியன்) | 168.2 | 170.1 | 173.8 |
| வருடாந்த அறைகளில் தங்கியிருப்போர் சதவீதம் (%) | 74.8 | 73.3 | 72.77 |
| தொழில் வாய்ப்பு | | | |
| நேரடி (எண்ணிக்கை) | 146,115 | 156,369 | 169,003 |
| மறைமுக (எண்ணிக்கை) | 189,544 | 202,846 | 219,454 |

***Source: Various Central Bank Reports, Sri Lanka***

அட்டவணை 09

சுற்றுலாத்துறையில் நேரடி மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புக்கள்

| வருடம் | நேரடி வேலை | மறைமுகமான வேலை | வருடம் | நேரடி வேலை | மறைமுகமான வேலை |
|---|---|---|---|---|---|
| 1970 | 5138 | 6940 | 1994 | 33956 | 47538 |
| 1971 | 6397 | 8640 | 1995 | 35068 | 49095 |
| 1972 | 7040 | 9500 | 1996 | 31963 | 44748 |
| 1973 | 7134 | 10780 | 1997 | 34006 | 47608 |
| 1974 | 8551 | 11550 | 1998 | 34780 | 48692 |
| 1975 | 10148 | 13700 | 1999 | 36560 | 51184 |
| 1976 | 11752 | 15900 | 2000 | 37943 | 53120 |
| 1977 | 13716 | 18520 | 2001 | 33710 | 47194 |
| 1978 | 15404 | 20795 | 2002 | 38821 | 54349 |
| 1979 | 18472 | 24937 | 2003 | 46761 | 65465 |
| 1980 | 19878 | 28022 | 2004 | 53766 | 75272 |
| 1981 | 23023 | 32232 | 2005 | 52085 | 72919 |
| 1982 | 26776 | 37486 | 2006 | 55649 | 77909 |
| 1983 | 22374 | 31234 | 2007 | 60516 | 84722 |
| 1984 | 24541 | 34357 | 2008 | 51306 | 71828 |
| 1985 | 22723 | 31810 | 2009 | 52071 | 72899 |
| 1986 | 22285 | 31199 | 2010 | 55023 | 77032 |
| 1987 | 20338 | 28473 | 2011 | 57786 | 80899 |
| 1988 | 19960 | 27944 | 2012 | 67862 | 95007 |
| 1989 | 21958 | 30741 | 2013 | 112550 | 157600 |
| 1990 | 24964 | 34950 | 2014 | 129790 | 170100 |
| 1991 | 26878 | 37629 | 2015 | 135930 | 183506 |
| 1992 | 28790 | 40306 | 2016 | 146115 | 189544 |
| 1993 | 30710 | 42944 | 2017 | 156369 | 202846 |

***Source: Tourism Development Authority, Sri Lanka***

*பொருளியல் துறையின் ஆண்டுச் சஞ்சிகை கூர்மையின் தொடர்ச்சியான வெயியீட்டுக்கு உங்கள் கருத்துக்களையும், விமர்சனங்களையும் தொடந்து வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்………*

***ஆசிரியர்***
***கூர்மை***
***பொருளியல் துறை,***
***வர்த்தக முகாமைத்துவ பீடம்,***
***கிழக்குப் பல்கலைக்கழகம்,***
***இலங்கை.***

***தொலைபேசி இலக்கம்: 065 2240735***
***மின்னஞ்சல்: editorcoormai@gmail.com***